பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 27 வியாழக்கிழமை 11.05.2023 கதிர் 182

### ஜனாதிபதித் தேர்தல் வரையும்

# பேச்சை இழுத்தடிக்க முயன்றால் ரணிலின் திட்டம் வெற்றிபெறாது

### நாடாளுமன்றத்தில் இடித்துரைத்தார் சாணக்கியன்



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை இழுத்தடிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தால் அவரது நோக்கம் வெற்றிபெறாது. எம்மை ஏமாற்றி அவரால் தனது பதவியில் சிறப்பாகச் செயலாற்ற முடியாது.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார். புதன்கிழமை இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

☞2

## இனி அது ரகசியம் அல்ல!

வடக்கு கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடத்தும் பேச்சு இன்று தொடங்குகின்றது. திட்டத்தின்படி இன்றைய தினம் தீர்க்கப்படவேண்டிய உடனடிப் பிரச்சினைள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. அதாவது அரசியல் கைதிகள் விடுதலை, படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளின் விடுவிப்பு, காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை, வடக்கு கிழக்கு பௌத்த மயமாக்கல் போன்ற விடயங்கள் இன்றைய தினம் பேசப்படவுள்ளன.

இவைஎல்லாம் குறித்து ஏற்கனவே பல தடவைகள் பேசப்பட்டுவிட்டது. அதற்குத் தீர்வு என்ன என்று ஆளும் தரப்பால் சொல்லப்பட்டும் விட்டது. ஆனால்,

☞2

## 33 லட்சம் பேருக்கு உதவியாக அரச மாதாந்தக் கொடுப்பனவு

நாட்டிலுள்ள 33இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் 'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிக வறியவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள பயளானிகளுக்கு எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு 15000ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதன்படி இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான என்ற 4 வகைப்பாடுககளின் கீழ் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன, அங்கவீனமானவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் அஸ்வெசும திட்டத்தின் கீழ் நலன்புரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் 400,000

☞2

## போராதனைப் பல்கலை. மாணவர் ஆர்ப்பாட்டம்

அடக்குமுறைகள் மற்றும் மாணவர்களின் உரிமைகளை முடக்கும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பேராதனைப் பல்கலைக்கழகமாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றையதினம், பல்கலைக்கழத்திலிருந்து பேரணியாகச் சென்ற அவர் கள், கலஹாச் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிவர்த்திசெய்யப்பட வேண்டியபலபிரச்சினைகள் இன்னமும் நிலுவையில் உள்ள நிலையில் தற்போது பல்கலைக்கழக நிர்ம் சி.சி.ரிவி கருவிகளைப் பொருத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டினார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின்தலைவர்லகிரு பெர்ணான்டோ போராட்டத்தின் நிறைவில் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகத்தில் தற்போது சி.சி.ரிவி கண்காணிப்பை ஏற்படுத்து-வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும், பல்கலைக்கழக மாணவர்களின் நலன் புரி விடயங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. மாஹாபொலவின் மாதாந்தத் தொகை ஐந்தாயிரமாக உள்ளது.

☞2

## 350 மருத்துவர்கள் ஒன்றாக ஓய்வு கிராமப்புற சேவைகள் பாதிப்புறும்

### தூர இடங்களிலுள்ள வைத்தியசாலைகளை மூட வேண்டிய அபாயம்

அரச வைத்தியசாலைகளில்பணிபுரியும்கிட்டத்தட்ட 350 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள்ஒரேநேரத்தில் ஓய்வு பெறுவதால், பல கிராமப்புற வைத்தியசாலைகள் மூடப்படும்அபாயம்உள்ளதாக சுகாதார அமைச்சகத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

350 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் ஒரே நேரத்தில் ஓய்வு பெற்றால், குறைந்தது 50 கிராமப்புற வைத்தியசாலைகளை மூடவேண்டியிருக்கும். தொலைதூர பகுதிகள் உட்பட நாடு முழுவதும் உள்ள கிராமப்புற வைத்தியசாலைகளில் 650 பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் பணிபுரிகின்றனர்.

350 பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், 400 பட்டதாரி வைத்திய அதிகாரிகள், 300 சிறப்பு வைத்தியர்கள் மற்றும் 50 பல் வைத்தியர்கள் உட்பட மொத்தம் 1000 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஓய்வு பெற உள்ளனர்,

நாட்டின் சுகாதாரத் துறையில் 500க்கும் மேற்பட்ட மூத்த வைத்தியர்களும் உள்ள நிலையில், தொடர்புடைய வைத்தியர்கள் ஜூன் 30 மற்றும் டிசம்பர் 31 ஓய்வுபெறவுள்ளதால், நாட்டின் சுகாதாரத் துறை கடும் நெருக்கடியில் சிக்குவதைத் தடுக்கமுடியாது.

தற்போது கிராமப்புற வைத்தியசாலைகளில் பணிபுரியும்சிலவைத்தியர்கள்நாள் ஒன்றிற்கு 300க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகளை பரிசோதித்து வருகின்றனர் - என்றார்.

இதேநேரம், இவ்வருடம் 1600 பயிலுநர்கள் பணிய மர்த்தப்படவிருந்த நிலையில் 1400 பேர் மட்டுமே அதற்கு விண்ணப்பித்துள்ளனர்

☞2

## தடை உத்தரவு நீடிப்பு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில்முன்னாள்சட்டமா அதிபர்தப்புலடிலிவேராவை கைது செய்வதையும் அவரிடம் வாக்கு மூலம் பெறுவதையும் தடுக்கும் வகையில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம்பிறப்பித்தஇடைக் கால தடைஉத்தரவு நீடிக் கப்பட்டுள்ளது.

ஜூன் 22 வரை இந்த தடை உத்தரவை நீடித்து, மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதியரசர் நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும்எம்.ஏ. ஆர். மரிக்கார் ஆகியோரை உள்ளடக்கிய ஆயம் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்குத்தேவையான வாக்குமூலத்தை பெற்றுக்கொள்வதற்காக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால், தம்மை ஆஜராகுமாறு விடுக்கப்பட்டுள்ள அழைப்புத் தொடர்பில் முன்னாள்

☞2

## நாணய நிதிய பணியாளர் குழு இன்று வருகை

சர்வதேச நாணய நிதிய பணியாளர்கள் குழு இன்று இலங்கைக்கு வருகின்றது.

இலங்கைக்கும், உலகளாவிய கடன் வழங்குநர்களுக்கும் இடையிலான வழக்கமான ஆலோசனைகளின் ஒரு பகுதியாக சர்வதேசநாணயநிதியத்தின் பணியாளர் கள் குழு மே 11 முதல் 23 வரை இலங்கையில் கலந்துரையாடல்களை நடத்த வுள்ளது..

மேலும். இந்த வருடத்தின் பிற்பகுதியில் முதல் மீளாய்வுப் பணிக்கு முன்னதாக,இந்தப்பயணம்அமையவுள்ளதோடு சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் இயக்குநர் கிருஷ்ணா சீனிவாசனும்இந்தப்பயணத்தில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் பதவி நீட்டிப்பு

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப் படவுள்ளது என உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி வரை மூன்று மாத பதவி நீட்டிப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜூன் 26 ஆம் திகதியிலிருந்து அடுத்த வருடம் வரை அவரது பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளது என்றுதெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அடுத்த பொலிஸ்மாஅதிபர்பதவியைக் குறிவைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் சிலர் ஆவலுடன் காத்துக்கிடக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (02)

## பேச்சுக்கு முஸ்லிம்களையும் அழைக்கவேண்டும் ஜனாதிபதி

வடக்குகிழக்குமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நடத்தப் படவுள்ள பேச்சுக்களில் முஸ்லிம்களையும்இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதிசட்டத்தரணிநிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

வடக்கு,கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தொடர்பேச்சு நடத்தவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

☞2

## டெங்கை கட்டுப்படுத்த ஜனாதிபதி மாகாண செயலர்களுக்கு உத்தரவு

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு மாகாண பிரதம செயலாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியதோடு, டெங்கு நோயை கட்டுப்படுத்த பொலிஸ், முப்படைகளின் முழுமையானஆதரவுவழங்கப்படும்என்றும்தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்பின்படி, டெங்கு நோயைக் கட் டுப்படுத்துவதற்கான அனைத்துமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு , அனைத்து மாகாண செயலாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்து மூலம் புதன்கிழமை அறிவித்தார்.

கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் 1896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்,மேல்மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள்பதிவாகியுள்ளனர். அது 49 சதவீதமாகும்.

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்கள் 21 சதவீதமாக உள்ளனர். அதில் 3.4சதவீதமான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர்.

இது தவிர, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களில் இருந்தும் அதிகமான நோயாளிகள் பதிவாகியுள்ளனர். கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நோயாளிகளின்எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் மேல் மாகாணத்தில்விசேடடெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்கள் அமுல் படுத்தப் பட்டதுடன், டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் துரித டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் கொழும்பு மாவட்டத்தில் 6678 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 7166 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 1902 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு

☞2

## வட்டி வீதம் குறையும்

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் பணவீக்கம் மிக வேகமாகப் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், அதற்குச் சமாந்தரமாக வட்டி வீதங்களும் வீழ்ச்சியடையுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எதிர்வுகூறியுள்ளார்.

கொழும்பில்செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொருளியல் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைதத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பணவீக்கம் நாம் எதிர்பார்த்ததை விடவும் மிகவேகமாக வீழ்ச்சியடைந்துவருகின்றது. அதனுடன் இணைந்ததாக உயர் மட்டத்தில் காணப்பட்ட வட்டி வீதங்கள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன.

அதுமாத்திரமன்றி கடன் மறுசீரமைப்புச்செயன்முறை தொடர்பில் முழுமையாக அறிவித்ததன்

☞2

## மூடிய அறைக்குள் ரணிலுடன் முக்கிய பேச்சு நடத்திய பஸில்

### பல யோசனைகள் முன்வைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் கடந்த வாரம் மூடிய அறைக்குள் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அதில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்ட போதிலும் முக்கியமாக ஜனாதிபதித் தேர்தல் பற்றித்தான் அதி கம் பேசப்பட்டது எனத் தெரிய வருகின்றது.

அதில் பல யோசனைகளை பஸில் முன்வத்தார் எனவும் அறியமுடிகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்ரணிலையேமொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துதல், ஐக்கிய தேசியக் கட்சியின்சிரேஷ்டஉறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குதல் உள்ளிட்ட பல ஆலோசனைகளைரணிலிடம் பஸில்முன்வைத்தார்எனவும் தெரியவருகின்றது. (02)

## ஆளுநர்கள் நியமனத்துக்கு ஐவர் பெயர்கள் முன்வைப்பு

### நால்வர் அரசியல்வாதிகள்

வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான ஆளுநர்களை விலகுமாறு அரசால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் விலகியதும் புதிய ஆளுநர்கள் நால்வரை நியமிப்பதற்கு ஐவரின் பெயர்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன. அவர்களுள்நால்வர்அரசியல்வாதிகள், ஒருவர் அதிகாரி.

நான்கு அரசியல்வாதிகளுள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க,நவீன்திஸாநாயக்க, தயா கமகே ஆகியோரின் பெயர்கள் அடங்குகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனிலிருந்து நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்களின் நியமனம் இடம்பெறும் என்று கடந்த வாரம் அரச தகவல்கள் தெரிவித்திருந்தன. ஜனாதிபதி இவ்வாரம் திங்கட்கிழமை நாடு திரும்பினார். எனினும், புதிய ஆளுநர்கள் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. (02)

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவை இதுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. காணிளை விடுவிப்பதற்குப் படையினர் இணங்கியிருக்கின்றனர். ஆனால், அது எப்போது நடக்கும் என்பதுதான் தெரியவில்லை. முன்னதாக நாட்டின் சுதந்திர தினத்துக்கு முன்னர் 108 ஏக்கர் நிலம் பலாலியைச் சுற்றிய பகுதிகளில் விடுவிக்கப்படும் என்று அரசுத்தலைவர் தெரிவித்தார். ஏற்கனவே விடுவிப்பதாக அறிவித்துநிகழ்ச்சிகள்எல்லாம் நடத்திய நிலங்களையும் சேர்த்து இந்த 108 ஏக்கர் விடுவிக்கப்பட்டது. அதன் பின்னர் மீதி நிலம் இனி எப்போது விடுவிக்கப்படும் என்பது தெரியவில்லை. இந்தப் பேச்சில் அதற்கான பதிலை அரசுத் தலைவர் சொல்லவேண்டும். தமிழ்தரப்பைப் பொறுத்தவரையில் கடந்த முறை விடுவிக்கப்படவேண்டிய நிலமாக அவர்கள் காட்டிய மொத்தத் தொகையிலிருந்து 108 ஏக்கரைக் கழித்துவிட்டு மீதமுள்ள நிலம் விடுவிக்கப் படவேண்டும் என்று சொல்வதைத் தவிர இதில் புதிதாகப் பேச ஒன்றும் இல்லை.

அது போன்றே அரசியல் கைதிகள் விடயமும், கடந்த முறை பேசும்போது சிறையில் இருந்தவர்களின் எண்ணிக்கையில் இருந்தது. நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டவர்கள்மற்றும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுடன்அரசுத்தலைவரின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும்கூட்டி அதனை மொத்த எண்ணிக்கையிலிருந்து கழித்து மீதமுள்ள எண்ணிக்கையிலானவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவேண்டும் என்று சொல்வதைத் தவிர அதிலும் பேசுவதற்கு எதுவுமில்லை.

ஆக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் மட்டுமே பேச வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அதிலும்கூடப் பேசுவதற்குப்பெரிதாகஎதுவும் இல்லை. ஏனென்றால், இதே ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின்கீழ்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கலப்புப் பொறிமுறையிலான விசாரணைக்கு இலங்கை அரசு ஒப்புக்கொண்டு 30/1 தீர்மானத்திற்கு அனுசரணை வழங்கியது. ஆனால்பின்னர் அது இம்மியளவுகூட நடைமுறைப்படுத்தவில்லை. போர்க் குற்றங்கள்குறித்த விடயத்தில் தமிழர்கள் பன்னாட்டு விசாரணை ஒன்றை மட்டுமே கேட்கிறார்கள். அதில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் குறைந்தபட்சம் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத்தொடுநர்களை உள்ளடக்கியதான கலப் புப் பொறிமுறை விசாரணையையாவது ரணில் நடத்த வேண்டும். அதை நடத்திக் காட்டியதன் பின்னரே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைத் தமிழர்கள்பரிசீலிக்கமுடியும்.

அப்படியில்லாமல், கலப்புப் பொறிமுறையையே நடைமுறைப்படுத்த முடியாத ரணில் - அந்தப் பொறிமுறையை அவர் பிரதமராக இருந்தபோது நடைமுறைப் படுத்த முடியாமல் இருந்திருக்கலாம், ஆனால்இப்போது அரசுத் தலைவர், முழு அதிகாரம் கொண்டவர், எனவே கலப்புப் பொறிமுறையை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு அவருக்கு எந்தத் தடையும் கிடையாது - உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவது என்பது குற்றவாளிகளைக் காப்பதற்கும் உலக நாடுகளை ஏமாற்றுவதற்குமானநடவடிக்கையே. எனவே தமிழ் அரசியல்வாதிகள் இன்றைய பேச்சில் அதனை ஏற்றுக்கொண்டு வந்தாலும் தமிழ் மக்கள் அதனை முற்றாக நிராகரிப்பார்கள். எப்படி காணாமற் போனோர் தொடர்பான இலங்கை அரசின் விசாரணைக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து அதனைத் தோற்கடித்தார்களோ அதுபோன்றே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் நடக்கும். அதுவும் தோற்கடிக்கப்படும். எனவே அந்த ஆணைக்குழு தொடர்பிலும் அதிகம் பேசுவதற்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்றைய பேச்சு இப்படி ஒன்றுமில்லாத விடயங்கள் குறித்ததாக இருப்பதால் அதிலிருந்து ரணிலின் வழக்கமானவாக்குறுதிகளைத்தவிர்த்து வேறுஎதுவும்வெளிவரவாய்ப்பில்லை. அது முடிந்ததும் நாளை அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்கள்நடத்தப்படும்என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பேச்சுக்களிலும் பெரிதாகஎந்தஅடைவும்இருக்காது என்கின்றன கொழும்பு அரசியலில் ரணிலுக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள். அதிகபட்சமாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும், அதற்காக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து தேர்தலை நடத்தும் ஒழுங்கைச் செய்வதற்கும் ரணில் இந்தப் பேச்சில் இணங்கக்கூடும்என்கின்றன அந்த வட்டாரங்கள். மற்றும்படி வழக்கம்போல புதிய அரசமைப்பு மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும், அதற்காக அனைத்துக் கட்சிகளுடனும்பேசிவிரைவில்ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுவதற்கும் அப்பால் இது விடயத்தில் எந்தவொரு நகர்வும் இருக்காது என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ரணில் இணக்கம் தெரிவித்து அறிவிப்பதுகூட தமிழர்களுக்காக அல்ல இந்தியாவிற்காகவே என்கின்றன அந்த வட்டாரங்கள். கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் ரணில் இந்தியாவையே பெரிதும் நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. பொருளாதார மறிசீரமைப்பு விடயத்திலும் அவருக்கு இன்னும் இந்தியாவின் உதவி பெருமளவில் தேவையாக இருக்கின்றது. அதற்காக இந்தியாவின் காலில்சென்றுவிழவேண்டிய தேவை இருக்கின்றது. இந்தியாவோஇலங்கைத்தமிழர்கள் விடயத்தில்இலங்கைஅரசைக் கொண்டுஎதையும்செய்யமுடியாத கையாலாகாத நாடு என்கிற கடுமையான விமர்சனம்இருக்கின்றநிலையில், குறைந்தபட்சம் மாகாண சபைத் தேர்தலையாவது நடத்துவிப்பதற்கு இந்தியா முயற்சிக்கிறது. ரணில் மே 19 இந்தியா செல்ல நாள் குறித்திருக்கிறார். அதற்கு முன்பு மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பையாவது விடுக்கப்பண்ணுவதற்காகத்தான் இந்திய ஏற்பாட்டில் இந்தப் பேச்சு நாடகம். ஆகக் குறைந்தது மே 19 ரணில் இந்தியா செல்லவேண்டுமானால் மாகாணத் தேர்தல் குறித்த அறிவிப்பு அதற்கு முன்னதாக வரவேண்டும் என்பதே தேவை. அதனை இப்படி பேச்சின் பின்னர் எட்டிய முடிவாகக் காட்ட விளைகின்றனர் என்கின்றது அந்த வட்டாரங்கள்.

ஆக மொத்தத்தில் பேச ஒன்றும் இல்லாத இந்தப் பேச்சையும் ரணில் தனது தேவைக்காகத்தான் பயன்படுத்தப்போகிறார். அதைத்தாண்டிஎதையாவது வென்றெடுக்கும்திறமைஎமது தமிழ்த் தலைவர்களுக்கு இருக்கின்றதா? பார்ப்போம் நாளை மலைக்குள் முடிவு தெரிந்துவிடும்.

- இடிமின்னல் -

## போராதனைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிற்றூண்டிச்சாலையில்உணவுப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான விடயங்களுக்கு தீர்வினைப் பெறுவதற்குநடவடிக்கைகள்எடுக்கப் படவில்லை. இவற்றுக்குதீர்வு வழங்காது சி.சி.ரிவியைப் பொருத்தினால்அதனைத்தடுப்பதற்காக தலையிடுவோம் - என்றார்.

## 33 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேருக்கான 2500 ரூபாய் மாதாந்த கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 வரையிலும், பாதிக்கப்படக்கூடிய 400,000 பேருக்கான 5000 ரூபாய் கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளது.

மேலும்வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 800,000 பேருக்கான 8500 ரூபாய் கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் 15,000 கொடுப்பனவும் 2023 ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 5000 ரூபாய் வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களைபெறும் 39,150 பேருக்கு 5000 ரூபாய் வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளைபெறும் 416,667 பேருக்கு 2000 ரூபாய் என்ற அடிப்படையிலும்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள 340 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 3,712,096 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்திற்கு தகுதியானவர்களை கண்டறிவதற்கான திட்டத்தில் தகவல்களை சரிபார்க்கும் பணிகளில் 91.5 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவுகளில்மூவர் அடங்கிய தெரிவுக்குழு ஒன்றின் கீழ் தகவல்கள்பரிசீலிக்கப்பட்டு மாவட்டச் செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது என்று மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது.

## 350 மருத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனவும் இதுவரை 200 வைத்தியர்கள் நியமனங்களை ஏற்கவில்லை என்றும் பிறிதொரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## தடை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்த மேன்முறையீட்டுநீதிமன்றம், கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி இடைக்காலத் தடை உத்தரவை முதலில் பிறப்பித்தது. அதன்படி அம்மனு மீதான பரிசீலனைகள் புதன்கிழமை மீண்டும் இடம்பெற்றன. இதன் போது முன்னாள் சட்ட மா அதிபருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான சட்டத்தரணிகள் குழாமும், மனுவின்பிரதிவாதிகளுக்காக சட்டமா அதிபர்திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க தலைமையிலான குழுவும் ஆஜராகின.

இந்த ரிட் மனு தொடர்பில் பிரதிவாதிகளின் ஆலோசனைகளைப்பெற்றுக்கொள்ளத் தனக்கு ஒரு மாத கால அவகாசம் வேண்டும் என இதன்போது மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் பாரிந்த ரணசிங்கநீதிமன்றில்குறிப்பிட்டார்.

இதற்கு மனுதாரர் தரப்பில் எந்த எதிர்ப்பும் வெளியிடப்படவில்லை. இந் நிலையில்அக்கோரிக்கையைஏற்ற நீதிமன்றம் ஒரு மாத கால அவகாசத்தை வழங்கி மனு மீதான பரிசீலனைகளை எதிர்வரும் ஜூன் 22 வரை ஒத்தி வைத்தது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊடகம்ஒன்றுக்கு வழங்கிய கருத்தினை மையப்படுத்தி வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஏப்ரல் 24 அந்த அழைப்பு மூன்றாவது தடவையாக விடுக்கப் பட்டிருந்தது.

## வட்டி வீதம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பின்னர், சந்தைவட்டிவீதங்கள் மேலும் விரைவாக வீழ்ச்சியடைவுள்ளன.

அத்தோடு பணவீக்கமானது இவ்வாண்டின் பின் அரைப்பகுதியில் நாம் ஏற்கனவே எதிர்வுகூறிய மட்டத்தை அடையவுள்ளது. மேலும் கடன்மறுசீரமைப்பை மேற் கொள்ளும்போது வங்கிக்கட்டமைப்பின்உறுதிப்பாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான உத்தரவாதம் வழங்கப்படும். ஆகவே பொதுமக்கள்அதுபற்றிஅச்சமடையத் தேவையில்லை - என்றார்.

## பேச்சக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடக்கத்தில் வடக்கு, கிழக்கு கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் இனப்பிரச்சினைத்தீர்வுதொடர்பில் பேச்சு நடத்தினார். 75 ஆவது சுதந்திர தினத்திற்குள் தீர்வைப்பெறுவதை இலக்கு வைத்து நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

பின்னர், அந்த முயற்சியைக் அவர் கைவிட் டார். உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலைப்பிற்போட்டார். தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அவர் மீண் டும் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை அழைத்துள்ளார். இது, ஜனாதிபதித் தேர்தலுக்கு தனக்கு ஆதரவினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஒன்றாக இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கின்றது.

எவ்வாறாயினும், வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் அனைத்துப்பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்கான ஒத்துழைப் புக்களையும் வழங்கவுள்ளோம். அந்த வகையில், வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசுகின்றபொது ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினை புறக்கணித்து விடமுடியாது.

இந்த விடயம் சர்வதேசத்தினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஏன் முஸ்லிம் காங்கிரஸை அழைக்கவில்லை என்பது பெரும் கேள்வியாகவுள்ளது. அவர் தமிழ்த் தரப்புடன் பேச்சுக்களை முன்னெடுத்து ஏமாற்றி விடப்போகின்றாரா இல்லையா அல்லது எம்மையும் அழைக்காது ஏமாற்றப்போகின்றாரா இல்லையா என்பதற்கு அப்பால் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதாக இருந்தால் நிச்சயமாக எம்மையும் அழைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறான அழைப்பு இன்னமும்கிடைக்கவில்லை. நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள அதே நேரம் எமது மக்களின் பிரச்சினைளுக்கும் தீர்வு தேவை - என்றார்.

## டெங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நோயாளர்களின் எண்ணிக்கை 15,746 ஆகும்.

திருகோணமலை மாவட்டத்தில் 108 டெங்கு நோயாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 106 டெங்கு நோயாளர்களும், அம்பாறை மாவட்டத்தில் 55 டெங்கு நோயாளர்களுமாக கிழக்கு மாகாணத்தில் 269 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இதுவரை 3 டெங்கு இறப்புகளும் பதிவாகியுள்ளன.

வடமாகாணத்தில் 1,326 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,121 டெங்கு நோயளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 51 பேரும், மன்னார்மாவட்டத்தில் 27 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 பேரும், வவுனியா மாவட்டத்தில் 94 பேரும் பதிவாகியுள்ளனர். வடமாகாணத்தில் இதுவரை 2 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன நோய் தடுப்புக்காக பொது சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் விரிவான வேலைத்திட்டத்தை ஏற்கனவே நடைமுறைப் படுத்தியுள்ளதாக மாகாண பிரதம செயலாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இதனிடையே டெங்கு ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு சுகாதாரத்துறைகளின்தலையீடு மட்டும்போதாதுஎன்றும், அதற்கு பொது மக்களின் ஆதர வும் தேவை என்றும் சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

## பேச்சை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமிழ்அரசியல்வாதிகளுக்குத் தொடர்ந்து ஆணை வழங்கி வருகிறார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுக்கப்படும் சகல அழைப்புக்களின்போதும் வெளிப்படைதன்மையுடனும், எதிர்பார்ப்புடனும் கூட்டங்களில் கலந்து கொள்கிறோம்.

75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுபேச்சுக்குஅழைப்பு விடுத்தார். இந்த பேச்சின் மூலம்சிறந்ததீர்வுகிடைக்கும் என்ற நம்பிக்கையில் எமது தலைவர் இரா.சம்பந்தன் இதயசுத்தியுடன் அதில் கலந்துகொண்டார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுஎன்றுஒவ்வொருமுறை அழைப்பு விடுக்கும்போதும் அதனைப் புறக்கணிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளை தனித்தனியாகசந்திக்கத்தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் மத்தியில் மாறுப்பட்ட பல கருத்துக்கள் காணப்பட்டன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை வேறுப்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என் பதை ஜனாதிபதியிடம் எடுத் துரைத்தோம்.

இதனை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகளைஒன்றாகசந்திக்கஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். இதற்கமையவியாழக்கிழமை காணிவிவகாரம்தொடர்பான பேச்சு இடம்பெறவுள்ளது, அடுத்த இரண்டுநாட்கள் அதிகார பகிர்வு தொடர்பில் பேச்சு இடம்பெறவுள்ளது..

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு ஆகியவற்றுக்குத் தீர்வு காணும் வகையிலான பேச்சுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது அதனைத் தமிழ்த் தரப்பினர் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணமக்கள்தமிழ்த்தலைமைகளுக்குத் தொடர்ந்து ஆணை வழங்குகிறார்கள். ஆகவே ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் பேச்சுக்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகள் கலந்துகொள்ளவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்வரை அரசியல் தீர்வு விவகாரத்தை பேச்சு ஊடாகமுன்னெடுத்துச்செல்ல ஜனாதிபதிதிட்டமிடுவாராயின் அது வெற்றி பெறாது. தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைக்காது. தமிழ் மக்களின் ஆதரவினால் மாத்திரம் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியாது என்பதை நன்கு அறிவோம். அதேநேரம் எங்களை ஏமாற்றி ஜனாதிபதியாக முறையாகக் கடமையாற்ற முடியாது என்பதையும் சொல்ல விரும்புகின்றோம். சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளவும் முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

English Classes
K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில் புரிபவர்,
ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature
077 766 8725


10kg & 11kg க்கு மேல்
சாதார சேவை (2-3 கிழமை)
விரைவு (Express) (3-6 நாட்கள்)
லண்டன் UK 1140/=
பிரான்ஸ் France 1970/=
ஜேர்மனி Germany 1800/=
சுவிஸ் Swiss 2130/=
கனடா Canada 2850/=
நோர்வே Norway 3050/=
அவுஸ்ரேலியா Australia 2300/=
அமெரிக்கா USA 2550/=
அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
யாழ்ப்பாணம்
நல்லூர்
ஆவரங்கால்
கிளிநொச்சி
வவுனியா
திருகோணமலை
கொழும்பு

075 330 5500 070 330 5500 076 122 1566

இந்தியா-சீனா-தாய்லாந்-டுபாய்
போன்ற நாடுகளில் இருந்து வியாபார நோக்கத்திற்காக
பொருட்களை இலங்கைக்கு விரைவாகவும் குறைந்த
கட்டணத்திலும் இறக்குமதி செய்து தரப்படும்
உங்கள் பொருட்கள் விபரங்களையும் நிறையையும்
வட்ஸ்சப்(whatsup) செய்வதன் ஊடாக
கட்டண விபரங்களை அறிய முடியும்
0753305500

# தொடர்ச்சியாகச் சாவடைந்து வரும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்

## கர்மவினை துரத்துகின்றது என்கிறார் ராஜபக்சக்களின் சகாவான ரோஹித

காலிமுகத்திடலில்போராட்டம் நடத்தியவர்கள் மற்றும் தொடர்புபட்டிருந்தவர்களைக் கர்மவினை துரத்திக்கொண்டிருக்கின்றது எனவும், இதனால் போராட்டக்காரர்களில் பலர்தொடர்ச்சியாகமரணித்து வருகின்றனர் எனவும் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

அதேவேளை, களுத்துறையில் சில நாட்களுக்கு முன்னர் 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராகச் செயற்பட்டவர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அவர்மேலும்கூறுகையில்,

காலிமுகத்திடல் போராட்டத்தில்பல்வேறுபட்டநபர்கள் செயற்பட்டனர். அங்கு கூடாரங்களை அமைத்து அவற்றுக்குப் பல பெயரிட்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும், அவர்கள் எமது எதிரியாக இருந்தாலும் கூட அவர்களுக்கு எந்தப் பாதிப்பு நடந்தாலும் அது தொடர்பாகமகிழ்ச்சியடையக் கூடாது. நமது பௌத்த நாட்டில் இயற்கையாக சில சம்பவங்கள் நடப்பதை அவதானிக்க முடிகின்றது.

காலிமுகத்திடல்ஆர்ப்பாட்டத்தில் பந்தங்கள் ஏந்தி மந்திரம் ஓதி செயற்பட்ட பூசாரி, மின்னல்தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளார்.

அதேபோன்றுஅங்கிருந்த நூலகத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்தற்கொலைசெய்து கொண்டுள்ளார்.

வெசாக்கின் போது கறுப்பு நிறத்தில் வெசாக் கூடு செய்தவர், இப்போது பைத்தியக்கார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தப் போராட்டத்தில் முக்கியமான ஒருவர் தெஹிவளை பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர்நீரில்மூழ்கி இறந்துள்ளார்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுக்கு மரண போஸ்டர் அச்சிட்டவர், லங்கா வைத்தியசாலையில் மரணித்துள்ளார். இதுதான் கர்மவினையால் கிடைப்பவை.

அதேவேளை, ஜனாதிபதியின் கொடியைதிருடிச்சென்ற தொழிற்சங்க பிரதானிஒட்டோ விபத்தில் தமது கால் ஒன்றை இழந்துள்ளார்.

அத்துகோரள எம்.பியின் கொலையுடன் தொடர்புடைய ஒருவர் சிறையில் உயிரிழந்துள்ளார். இவை இந்த ஒரு வருடத்துக்குள் நடந்தவை. கர்மவினையின் பலன்களை இப்போது காணக்கூடியதாக உள்ளது. - என்றார். (02)

### ஜனாதிபதித் தேர்தலில் ஜனக ரத்நாயக்க போட்டி?

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் அவர் பேசு பொருளாகத் திகழ்ந்தவர். மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழுதும்

மாணவர்களுக்காக மின் வெட்டை நிறுத்துமாறு கூறியும் அவர் மக்கள் பக்கம்நின்று செயற்பட்டார்.

இத ற்காக அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவும் உள்ளது.

இந்தநிலையில், அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (02)

## கல்முனைப் பிரதேச செயலரின் வருடாந்த இடமாற்றம் நிறுத்தம்

### அரசியல் தலையீட்டடை அடுத்து

கல்முனைப் பிரதேச செயலர் ஜெ.லியாகத் அலிக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் அரசியல் தலையீட்டை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அவரது இடமாற்றத்தை நிறுத்துமாறு தான் விடுத்த கோரிக்கையை ஏற்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன இந்த இடமாற்றத்தை நிறுத்தி வைத்தார் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலாளருக்கு மண்முனை தென்மேற்கு பிரதேச (பட்டிப்பளை) செயலகத்திற்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அதனை நிறுத்தக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ்பிரதமரைநாடாளுமன்றத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் புதன்கிழமை காலை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜெ. லியாக்கத் அலி அவர்களின் இடம்மாற்றத்தை ரத்துச் செய்யுமாறு தான் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து பிரதமர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக்கவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த இடமாற்றத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப் புரை விடுத்துள்ளார் என ஊடகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவித்தார்.

கடந்த 2021.03.01 முதல் பெரியளவிலான இடப்பரப்பையும், பல்லின சமூக பரம்பலையும் கொண்ட கல்முனைக்கு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட ஜெ.லியாக்கத் அலி இரண்டு வருடங்கள் மட்டுமே குறித்த சேவை நிலையத்தில் கடமையாற்றியுள்ள நிலையில் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும்கவலையை அளித்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு அவரது இடமாற்றத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதமருக்குசிலதினங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார்.

நிர்வாக சேவை தரம் ஒன்றைசேர்ந்தஜெ.லியாக்கத் அலி சிறந்த நிர்வாகியாகவும், தனது பொறுப்புகளை பாரபட்சமின்றி செய்ததன் மூலம் மக்கள் மத்தியில் நற்பெயருடன் இருப்பவர் என்றும், பல்லின சமூகங்கள் வாழும்கல்முனையில்சிறந்த நிர்வாகத்தை வழங்கியவர் என்றும் மேலும் தனது கோரிக்கையில்நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அன்று சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## களுத்துறை மாணவி இறப்பு:

### பிரதான சந்தேகநபரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி!

களுத்துறையில் 16 வயது மாணவி உயிரிழந்த சம்பவத்துடன்தொடர்புடைய 29 வயதான பிரதான சந்தேகநபரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை நடத்தப்பொலிஸாருக்குஅனுமதி வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை விடுதி ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்து பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் இன்று களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்த மாணவியின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சம்பவ தினத்தன்று மாணவியின் தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் குறித்து பொலிஸார் அவதானம் செலுத்தியுள்ளனர்.

எனினும், அவரது தொலைபேசி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாணவி உயிரிழந்ததையடுத்து பிரதான சந்தேகநபர், முன்னதாக விடுதியிலிருந்து சென்ற தமது நண்பரையும், நண்பரின் காதலியையும் மீண்டும் சம்பவ இடத்துக்கு வரவழைத்து, மாணவியின் தொலைபேசியை ரயில் மார்க்கத்துக்கு அருகிலுள்ள கால்வாய் நோக்கி வீசினார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் பல விடயங்களைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குறித்த மாணவி, விடுதியின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார் என்று சந்தேகநபர் கூறினார் என்று விசாரணை முன்னெடுக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாங்கள் இருவரும் ஒன்றாக அறையில் இருந்தோம். அவள் விருப்பத்துடன் என்னுடன் தங்கினாள். சிறிது நேரம் கழித்து அவளுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதன் பின்னர் அவள், 'அசிங்கமான காரியங்களைச் செய்யாதே, நான் இப்போது சமூகத்தை எப்படி எதிர்கொள்வது?' என்று கத்த ஆரம்பித்தாள். பின்னர் திடீரென ஜன்னல் அருகே இருந்த கதிரையில் ஏறி ஜன்னல் வழியாகக் குதித்தாள் என்று பிரதான சந்தேகநபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இருவரும் மனமுவந்து அறையில் இருந்தனர் என்றும், பிரதான சந்தேகநபரால் அவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளதுஎனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையிலும் அவரது மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையிலும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தின் பின்னர் தப்பிச் சென்றிருந்த சந்தேகநபர், படகு மூலம் நாட்டை விட்டு தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்தார் என்றும் விசாரணைகளில் அம்பலமானது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும்,சந்தேகநபரின் வாக்குமூலத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், பல கோணங்களில் தொடர்ந்தும்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் குறித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (02)

## கிருமி தொற்று இனங்காணப்பட்ட மருந்து பயன்பாட்டில் இருந்து விலக்கப்பட்டுள்ளது

### விசேட கண் வைத்திய நிபுணர் கபில் பந்து திலக தகவல்

நுவரெலியா, மே 11

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சையின் போது பயன்படுத்தப்பட்ட மருந்தொன்றில் காணப்பட்ட கிருமி காரணமாக, சத்திர சிகிச்சை மேற்கொள்ள சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தற்போது அந்த மருந்து பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் நோயாளர்கள்அச்சமடையத்தேவையில்லை என்று கண் சத்திர சிகிச்சை தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சங்கத்தின் தலைவர் விசேட கண் வைத்திய நிபுணர் கபில் பந்துதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட சிலருக்கு ஒரு வகை கிருமி தொற்று இனங் காணப்படுவதற்கு முன்னரே இவ்வாறானநிலைமை, நுவரெலியா பொது வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

எவ்வாறிருப்பினும் தற்போது இது தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வழமை போன்று தற்போது கண் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சத்திரசிகிச்சையின் பின்னர் பயன்படுத்தப்பட்ட மருந்தில் கிருமிகள் காணப்பட்டதை பரிசோதனை அறிக்கைகள் உறுதிப்படுத்தியிருந்தன. எனவே அந்த மருந்து தற்போது பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சிலர் விழிப்புலனை இழந்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

புத்தாண்டுக்கு சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை மற்றும் பல வைத்தியசாலைகளில் இவ் வாறான தொற்றுக்கள் பதிவாகியிருந்தன. இவை தொடர்பாகமுறையானவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் தலையீட்டில், இந்த வகையான அவசரநிலை முறையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய அதற்கான அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் போதே குறிப்பிட்ட மருந்தொன்றில் கிருமி இருப்பது இணங்காணப்பட்டது.

ஆய்வறிக்கைகள் இதனை உறுதிப்படுத்தியதையடுத்து அந்த மருந்து பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எனினும்தற்போது வைத்தியசாலைகளில் சாதாரண முறையில் கண் சத்திரசிகிச்சைகள்நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக நோயாளர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. - என்றார்.




## 15 வயது சிறுமி கடத்தலுடன் தொடர்புடைய மூவர் சிக்கினர்

கம்பஹா, மினுவாங்கொடையில் 15 வயது சிறுமி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று மினுவாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர், அவரின் தந்தை மற்றும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றின் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை, ஓபாத பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமி கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளார் என்று வெல்லவாய காபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

ஓபாத பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர் ஒருவரால் குறித்த சிறுமி கடத்தப்பட்டுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமிக்கும் இளைஞருக்கும் இடையே காதல் தொடர்பு இருந்து வந்தது என்றும், சிறுமி அந்த உறவை முறித்துக் கொண்டதால் குறித்தஇளைஞர்தொடர்ந்தும் அவரை அச்சுறுத்தி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக சிறுமியைவெல்லவாயபகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்க வைக்க குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் குறித்த இளைஞர், சிறுமி தங்க வைக்கப்பட்டிருந்த உறவினரின் வீட்டுக்குச் சென்று சிறுமியை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# முஸ்லிம்களையும் இணைப்பது கட்டாயம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு, நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் இன்றும் நாளையும் அரசுத் தலைவர்களுக்கும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடக்கவுள்ள பேச்சில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்கிற செய்திகள் கரிசனைக்குரியவை. அதனடிப் படையில் பார்த்தால் தற்போது நடப்பது தீர்வு குறித்து வடக்கு கிழக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்ளுடன் நடத்தப்படும் பேச்சாகவே தெரிகின்றது. வடக்கு கிழக்குத் தீர்வுக்கு இது எப்படி ஒரு முழுமையான தீர்வாக அமையமுடியும். இன்னொன்று, அப்படிப் பேசுவதாக இருந்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதாக இல்லாமல் தமிழ்க் கட்சிகளுடன் நேரடியாகவே பேசியிருக்கலாம். இதற்கிடையிலான சூட்சுமங்கள் என்ன?

இந்தப் பேச்சுக் குறித்த செய்திகள் வெளியானபோது, வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தீர்வு, நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அரசுத் தலைவர் பேச்சு நடத்தப் போகிறார் என்றே கூறப்பட்டன. அதற்காக வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசுத் தலைவரின் மேலதிக இணைப்புச் செயலாளரால் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அப்படி வடக்கை மட்டும் தனியே பிரித்துச் சந்திக்க முடியாது என்று எதிர்ப்பு வெளியிடப்பட்டதை அடுத்து கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதில் சேர்த்துக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அப்படியானால் வடக்கு கிழக்கைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுமே இந்தப் பேச்சிற்கு அழைக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு அழைக்கப்படவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்திருக்கிறது. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நடத்தப்படவுள்ள பேச்சுக்களில் முஸ்லிம்களையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் கோரியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடக்கத்தில் வடக்கு, கிழக்கு கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்தினார். பின்னர், அந்த முயற்சியைக் அவர் கைவிட்டார். உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பிற்போட்டார். தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அவர் மீண்டும் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை அழைத்துள்ளார். இது, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கான ஆதரவினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஒன்றாக இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கின்றது.

வடக்கு,கிழக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசுகின்றபொது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினை புறக்கணித்து விடமுடியாது. இந்த விடயம் சர்வதேசத்தினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஏன் முஸ்லிம் காங்கிரஸை அழைக்கவில்லை என்பது பெரும் கேள்வியாகவுள்ளது. வடக்கு, கிழக்கு மகக்ளின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதாக இருந்தால் நிச்சயமாக எம்மையும் அழைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறான அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை. நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள அதேநேரம் எமது மக்களின் பிரச்சினைளுக்கும் தீர்வு தேவை என்பதை வலியுறுத்துகின்றோம் – என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அவரது கருத்துக்கள் நியாயமானவை. பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசுவதென்பதுவேறு, வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவதென்பது வேறு. அப்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசும்போது முஸ்லிம்களைத் தவிர்த்துவிட்டுப் பேச முடியாது. அது ஏற்புடையதும் அல்ல. எனவே இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ள அரசுத் தலைவர் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## 200 அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு; குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவிப்பு



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் பணிபுரியும் 200 அதிகாரிகளுக்கு எதிராக நாடு பூராகவும் மக்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

மக்களுக்கான சேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதில்லை, உதாசீனம், தரக்குறைவாக நடந்துகொள்ளல் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் இந்த அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன என்று உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்தார்.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தி குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (02)

## தெஹிவளையில் செவ்வாயிரவு இளைஞர் அடித்துக் கொலை

### 14 பேர் கைது

தெஹிவளைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு தெஹிவளைப் பகுதியில் உள்ள குளிரூட்டி திருத்தும் நிலையம் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிலையத்துக்குள் பலவந்தமாக நுழைய முற்பட்டதாகக் கூறப்படும் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 27 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்பதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் குறித்து தெஹிவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (02)

## கிழக்குப் பொது நூலகங்களில் கணினி மயமாக்கல் செயற்றிட்டம்

யு.என்.டி.பீ. நிறுவனமும் தேசியநூலகஆவணவாக்கல் சேவைகள் சபையும் இனைந்து கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பொது நூலகங்களை கணனி மயமாக் கல் செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயிற்சி 8.05.2023 தொடக்கம் 10.05.2023 வரை திருகோணமலை முகாமைத்துவப் பயிற்சி பிரிவில் நடைபெற்றது இதில் 45 வரையான நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தலைவர் பேராசிரியர் நந்த தர்மரத்தின, பணிப்பாளர் வடுகே, உதவிப் பணிப்பாளர் அரவிந்த, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டவர்களுக்கான மருத்துவக் கட்டணங்களை புதுப்பிக்க நடவடிக்கை

அரச வைத்தியசாலைகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட தரப்பினருக்கான மருத்துவ செலவுக்காக அறவிடப்படும் தொகை பல வருடங்களுக்கு புதுப்பிக்கப்படாமலுள்ளது. இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தற்போது வெளிநாட்டவர்கள் நாட்டில் சிகிச்சை பெறும் போது அல்லது சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தனியார் வைத்தியசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்களை விட பன்மடங்கு குறைவான கட்டண அறவீட்டு முறைமையே அரச வைத்தியசாலைகளில் காணப்படுகிறது.

எனவே சுகாதார அமைச்சரால் அரச வைத்தியசாலைகளில் கட்டண அறவீட்டு முறைமை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் இவ்விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பாக இவ்வாரம் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து நாடளாவிய ரீதியில் அரச மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை விரிவாக்கம் செய்தல் பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான சுகாதார காப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் குறிப்பிடத்தக்களவு பிரஜைகள் வேறு சுகாதாரக் காப்புறுதி உத்தேசத் திட்டத்தின் மூலம் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், அரச சுகாதார சேவைகள் முறைமையில் மேலதிக வசதிகளுக்குப் பதிலாக தனிப்பட்ட ரீதியாக கட்டணம் செலுத்தி குறித்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒருசில பிரஜைகள் விருப்பத்துடன் உள்ளனர். அதற்கமைய, இலங்கைப் பிரஜைகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் அரச மருத்துவ மனைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில்

### உலக உணவுத் திட்டம் தகவல்

2022 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

6.3 மில்லியன் மக்கள் 2022 ஆம் ஆண்டில் உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களின் கடுமையான பற்றாக்குறையால் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தனர் எனக் கூறியுள்ளது.

1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் 2022 இல் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

தொடர்ச்சியான வறட்சி, வெளிநாட்டு கையிருப்பு, அரசியல் நெருக்கடி, உயர் பணவீக்கம் மற்றும் பொதுக் கடன் போன்ற பல காரணிகள் நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தின.

2019 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை 10 சதவீதமாக இருந்த ஒரு நாட்டிற்கு இது தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

## ஓட்டோக்களை மின்சாரத்தில் ஓடவைக்கும் திட்டம் ஆரம்பம்

நாட்டில் தற்போதுள்ள ஓட்டோக்களை மின்சார ஓட்டோக்களாக மாற்றும் திட்டம் இன்று (வியாழக்கிழமை) முதல் அமுல்படுத்தப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக 300 பெற்றோல் ஓட்டோக்கள் மின்சார ஓட்டோக்களாக மாற்றப்படவுள்ளன என ஆணையாளர் நாயகம் நிராந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேரும் மொட்டுக் கட்சியின் 15 எம்.பிக்கள்?

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுடன் இணையப் போகின்றார்கள் என்று தொடர்ச்சியாகக் கூறப்பாடலும்கூட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பக்கம் இருந்து 15 பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அவ்வாறு இணையவுள்ள 15 எம்.பிக்களில் நால்வருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - 07 இல் உள்ள இருதரப்புக்கும் நன்கு பரிச்சயமான ஒருவரின் இல்லத்தில்தான் அந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், அதனையொட்டி அரசுக்குள் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன என்றும் அந்த நால்வரும் சஜித்திடம் கூறியுள்ளனர்.

15 பேரும் நேராக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையப் போகிறீர்களா அல்லது கூட்டணியாக இணையப் போகிறீர்களா என்று 15 பேரும் கூடிப் பேசி ஒரு முடிவை எடுங்கள் என்று அவர்களிடம் சஜித் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு இரவு விருந்துடன் நிறைவு பெற்றது. அடுத்த சந்திப்புக்கான திகதியும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது என்றும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (02)

## மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

ரயில்நிலைய பொறுப்பதிகாரிகள் ஆரம்பித்த வேலை நிறுத்த போராட்டம் காரணமாக, நேற்று நள்ளிரவு முதல் மலையகத்திற்கான சகல ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் ரயிலில் பயணஞ் செய்யும் மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, மலையக பகுதியில் உள்ள ரயில் நிலையங்களின் கதவுகள் யாவும் பூட்டப்பட்டு இருந்ததுடன், பயணிகள் ஓய்வு அறை, உணவகம் உட்பட அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன.

ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரி ஒருவருக்கு பிரதிப் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் நள்ளிரவு முதல் இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நிலைய பொறுப்பதிகாரிகளின் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்காக மலையக பஸ்தரிப்பு நிலையங்களில் பல தனியார் மற்றும் இ.போ.சபைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள மோட்டார் சைக்கிள்கள் திருட்டுகள்!

யாழ்ப்பாண நகர் பகுதியில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிளில் திருட்டுக்கள் அதிகரித்து உள்ளன எனவும், அது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அண்மைய நாள்களில் பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகளுக்கு முன்பாக , கடைகளுக்கு முன்பாக தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி விட்டு , ஒரு சில நிமிடத்தில் திரும்பி வந்திடுவோம் எனும் நோக்கில், மோட்டார் சைக்கிள் திறப்புக்களை எடுக்காமலும், மோட்டார் சைக்கிள்களை இயங்கு நிலையில் விட்டும் சிலர் செல்கின்ற சமயங்களை அவதானித்து , அந்த மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

திருடப்படும் மோட்டார் சைக்கிள்கள் அன்றைய தினம் மாலை அல்லது மறுநாள் ஆள்நடமாட்டம் அற்ற பகுதிகளில் கைவிடப்பட்ட நிலைகளில் பொலஸாரினால் மீட்கப்படுகின்றன.

எனவே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு செல்வோர் அதனை பூட்டி பாதுகாப்பாக நிறுத்தி செல்லுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை கொண்டு ஏதேனும் குற்ற செயல்களில் ஈடுபடுகின்றனரா? இத்தகைய மோட்டார் சைக்கிள் திருட்டில் கும்பலாக ஈடுபடுகின்றனரா? அல்லது ஓரிருவர் மாத்திரம் ஈடுபடுகின்றனரா என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொல்பொருள் திணைக்கள ஒத்துழைப்புடன் வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தீவிரம்!

## பல தகவல்களை வெளியிட்டார் சிறிதரன்



தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் மத மற்றும் பூர்வீக உரிமைகள் பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்தப்படுகிறது. அவரவர் உரிமைகளை பின்பற்ற இடமளிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்று மதி அபிவிருத்தி சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

சிங்கள பேரினவாத அரசாங்கம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டு மேற்கொண்ட 30 வருட கால யுத்தம் நிறைவடைந்துள்ள பின்னணியிலும், பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தீவிரமடைந்துள்ளன.

தமிழர்களின் மத உரிமைகள் மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் மத உரிமைகள் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி அழிக்கப்படுகின்றன. இதற்கு தொல்பொருள் திணைக்களம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகிறது .

முழு நாடும் பொருளாதாரப் பாதிப்பில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் சிங்கள மற்றும் பௌத்த கடும்போக்கான ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு தவிக்கிறார்கள். அவரவர் உரிமைகளை அவரவருக்கு வழங்குங்கள். தமிழர்களின் பூர்வீக உரிமைகளை தொல்பொருள் என்று குறிப்பிட்டுக் கொண்டு கையகப்படுத்துவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் கோயில்கள், காணிகள், புராதன சின்னங்கள் பௌத்த மயமாக்கலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம், வெடுக்குநாறி ஆதிலிங்கேஷ்வரர் ஆலயம், குறுந்தூர்மலை, உருத்திரபுரம் சிவன் கோயில், மன்னித்தலை சிவன் கோயில், கிருஷ்ணபுரம், நிலாவரை – ஆழம் காண முடியாத அதிசய கிணறு, கீரிமலை, மயிலிட்டி, மாதகல், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, நயினாதீவு, மாவிட்டபுரம் சிவன் கோயில், திருக்கோணேஷ்வரம், கன்னியாய் வெந்நீரூற்று, சாம்பல் தீவு, மற்றும் கங்கு வேலி சிவன் கோயில், கல்லடி ஆதி ஸ்ரீ மலைநீலி அம்மன் கோயில், இலங்கைத்துறை முகத்துவாரம் பெரியசாமி கோயில், மூதூர் மலையடிப் பிள்ளையார் கோயில், திருகோணேஷ்வரம் புனித மரியாள் கல்லாரி காணி, அரிசிமலை, திருகோணேஸ்வரம் பேரூந்து நிலையம், சேருவில் திருமங்களாய் சிவன் கோயில், தென்னமரவடி கந்தசுவாமிமலை முருகன் கோயில், திரியாய் காணி அபகரிப்பு, குச்சவெளியில் அமைக்கப்படும் 31 பௌத்த விகாரைகள், செம்பிமலை சிவன் கோயில், இருதயபுரம் விநாயகர் கோயில், கூனித்தீவு முருகன் கோயில், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை, அம்பாறை உகந்தைமலை முருகன் கோயில், கச்சத்தீவு ஆகிய கோயில்கள் மற்றும் காணிகளில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு தீவிரமடைந்துள்ளது.

தமிழர் தாயகத்தின் இதயபூமியான முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு ஆரம்பிக்கும் பிரதேசமான பழைய செம்மலைப் பகுதியில் காலாகாலமாக இருந்து–வரும் இந்துக்களின் ஆலயமான பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்து அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை, வவுனியா மாவட்டம், நெடுங்கேணி (வவுனியா வடக்கு) பிரதேச செயலாளர் பிரிவின் ஒலுமடு பாலமோட்டை கிராமத்தில் இருந்து கிட்டத்தட்ட 3 மைல் தொலைவில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய ஆக்கிரமிப்பு, முல்லைத்தீவு மாவட்டம், நெடுங்கேணி பிரதேசத்திலிருந்து வடகிழக்குத்திசையில் சுமார் 14 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள தண்ணிமுறிப்புக் குளத்தின் வடக்குப் பக்கத்தில் குருந்தூர் மலை ஆக்கிரமிப்பு,

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகைக்குட்பட்ட உருத்திரபுரம் கிராமத்தில் இந்துக்களின் பொற்காலமாகக் கருதப்படும் சோழர்காலத்தில் முற்றுமுழுதாக திராவிடக் கட்டடக் கலைமரபைப் பின்பற்றி கட்டப்பட்டு மூர்த்தி தலம் இதீர்த்தம் என்பன இயல்பாய் அமையப்பெற்ற உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் என்னும் வரலாற்றுத் தொன்மையும் பழமையும் வாய்ந்த சிவாலயத்தை அபகரிப்பதற்கான முயற்சி, கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கௌதாரிமுனை மண்ணித்தலை சிவன் கோவில் பணிகள் ,வழிபாடுகளுக்கு அனுமதி மறுப்பு, கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிருஸ்ணபுரம் கிராமத்தில் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோவில் அகற்றப்பட்டு புத்தர் சிலை வைக்கப்பட்டமை, யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் புத்தூரை அண்மித்திருக்கும் ஒரு கிராமம்தான் நிலாவரை.

இந்த இடத்தில் இயற்கையாக அமைந்த ஆழங்காண முடியாத கிணற்றில் மேற்கொள்ளப்படும் ஆய்வுப்பணி, போர் முடிவுற்று 13 ஆண்டுகளைக் கடந்த பின்னரும் விடுவிக்கப்படாத நிலையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் கீரிமலையில் இருந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சடையம்மா மடம் என்பவற்றோடு அங்கிருந்த இந்துமத அடையாளங்கள் இடித்து அழிக்கப்பட்டுள்ளன

முற்றுமுழுதாக இந்து சமயத்தைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழும் யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள நாவற்குழி பகுதியில் நல்லிணக்கவிகாரை என்னும் பேரில அமைக்கப்பட்ட சமித்தி சுமண விகாரை மக்களின் எதிர்ப்புப்போராட்டங்களுக்கு மத்தியிலும் கடந்த 2023.03.18 அன்று மிகப் பிரமாண்டமான முறையில் பௌத்த மத சம்பிரதாயங்களுக்கு அமைய திறந்து வைக்கப்பட்டுள்ளமை ,யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குஇ மயிலிட்டியில் அமைந்திருந்த பல நூறுவருடங்கள் பழைமையான வரசித்தி விநாயகர் ஆலயம் மற்றும் சென் மேரி தேவாலயம் ஆகியவை முற்றாக தரைமட்டம் ஆக்கப்பட்டு இராணுவ மாளிகை ஒன்று அவற்றின் மீது கட்டப்பட்டுள்ளமை.

யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தையிட்டி தெற்கு பிரதேசத்தில் திஸ்ஸ விகாரை என்னும் பெயரிலான புதிய விகாரை ஒன்று பொதுமக்களுக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டு அந்தக் காணியில் குடியிருந்த பொது மக்கள் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளமை யாழ்ப்பாணத்தின் வலிகாமம் இமாதகல் பகுதியில் அமைந்துள்ள சம்பில்துறைப் பிரதேசத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களின் பெருமளவான நிலப்பகுதியில் மாபெரும் விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் தனிப்பெரும் தீவான நெடுந்தீவு மண்ணின் கோட்டைக்காடு என அழைக்கப்படும் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இன்றும் தமிழர் தம் பண்பாட்டு மரபியல் அடையாளமாகப் பேணப்பட்டுவருவதும் கி.மு.200 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் நெடுந்தீவு நயினாதீவு ஊர்காவற்றுறை காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை ஆட்சிசெய்த ஈழத் தமிழ் மன்னனான விஷ்ணு புத்திரவெடியரசன் காலத்தில் அமைக்கப்பட்டது மான விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்கான முனைப்புகள் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மிகத்துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை நயினாதீவு, மாவிட்டபுரம் சிவன் கோவில், திருக்கேதீஸ்வரம், கன்னியா வெந்நீரூற்று , சாம்பல்தீவு புத்தர் சிலை உள்ளிட்ட இன்னும் பல் விடயங்களை புகைப்பட ஆதாரங்களுடன் .தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஸ்ரீதரன் சபையில் ஆற்றுப்படுத்தியுள்ளார். இவை ஹன்சாட்டின் பதிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## ஆளுநர்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே!

### அமைச்சரவை பேச்சாளர் பந்துல திட்டவட்டம்



ஆளுநர்களின் நியமனம் , பதவி நீக்கம் என்பன எம்முடன் தொடர்புடைய விடயமல்ல. அவை முழுமையாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவை–யாகும்.

ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுபவர்களாவர்.

எனவே அது குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கான முழுமையான உரிமையும், அதிகாரமும் அவருக்கு மாத்திரமே காணப்படுகிறது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வடமேல் , கிழக்கு , சப்ரகமுவ மற்றும் வடக்கு மாகாண ஆளுநர்களை பதவி விலகுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு ஆளுநர்கள் பதவி விலகிய பின்னர் அந்த பதவிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களே நியமிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை சாடும் வகையில் , கடந்த சனிக்கிழமை திருகோணமலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹாம்பத், 'கிழக்கிலிருந்து ஆளுநராக உங்களை சந்திக்கும் இறுதி நாள் இதுவென்று எண்ணுகின்றேன்.' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படக் கூடும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எனினும் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இதனை மறுத்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சரவை ஊடக சந்திப்பில் வினவிய போதே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஓமான் முதலீட்டாளர் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நாடாளுமன்றுக்கு அறிக்கை தருவேன்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்

ஓமான் முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணை இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

அதனால் இதுதொடர்பாக பூரண விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கூடியபோது, பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தில் கட்டான பிரதேசத்தில் ஓமான் நாட்டு முதலீட்டாளர் மீது கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த தாக்குதல் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படாமல் இருப்பதால் குறித்த முதலீட்டாளர் நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை எடுத்து வருவது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவிக்கையில் –

ஓமான் நாட்டு முதலீட்டாளருக்கு சொந்தமான ஆடைத்தொழிற்சாலை கட்டான பிரதேசத்தில் இயங்கி வருகிறது. இதில் அந்த பிரதேசத்தைச்சேந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொழில் செய்து வருகின்றன.

ஆனால் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த தொழிற்சாலை வெளிநாட்டு முதலீடடாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக அவருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

அதனால் குறித்த முதலீட்டாளர் நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை எடுத்து வருகிறார். முதலீட்டாளர் நாட்டைவிட்டு சென்றால், அந்த பிரதேசத்தில் தொழில் செய்துவரும் குடும்பங்கள் நடுத்தெருவில் விடப்படும் அபாயம் இருக்கிறது.

அதனால் அவருக்கு நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த சுதர்னி பெர்ணான்டோ புள்ளே தெரிவிக்கையில், முதலீட்டாளர்களை நாட்டக்கு கொண்டுவர முயற்சித்துவரும் நிலையில், இருக்கும் முதலீட்டாளர்களை அச்சுறுத்தி நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

அதனால் கட்டான பிரதேசத்தில் தொழிற்சாலை அமைத்திருக்கும் ஓமான் முதலீட்டாளருக்கு நீதியை பெற்றுக்கொடுத்து, நாடு தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த நி;ன் பண்டார எம்.பி. தெரிவிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவுக்கு எதிராகவே குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. இலஞ்சம் தொடர்பான சம்பவமே இந்த தாக்குதலுக்குக் காரணமாகும்.

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவமும் இலஞ்ச கலாசாரமே காரணமாகும். அதனால் மீண்டும் அந்த கலாசாரத்தை ஏற்படுத்தப்போகிறோமா?. இவ்வாறான இராஜாங்க அமைச்சரின் செயற்பாடுகள் காரணமாக முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதில்லை. அதனால் இராஜாங்க அமைச்சரை அந்த பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம். –என்றார்.

இதன்போது சபையில் இருந்த நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, இதற்கு பதிலளிக்கையில், ஓமான் முதலீட்டாளர் மீதான தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணை இடம்பெறவில்லை என்றே அனைவரும் தெரிவித்திருந்தனர்.

பொலிஸாரால் முன்வைக்கப்படும் அறிக்கையின் அடிப்படையிலேயே நீதிமன்றம் செயற்படுகிறது.

அதனால் இதுதொடர்பாக பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பாக பூரண விசாரணை ஒன்றை நடத்தி, அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

## சட்டவிரோதமாக மசகு எண்ணெய் வந்தமை விஜித ஹேரத் – காஞ்சன கடும்வாக்குவாதம்!

சட்டமா அதிபரின் உத்தரவையும் மீறி அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்துக்கு புறம்பாக வேறு நிறுவனத்தின் ஊடாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சட்டவிராதேமான முறையில் மசகு எண்ணெய் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பாரிய ஊழல் இடம்பெற்றிருக் கிறது என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில் -

2022 டிசெம்பர் 19 ஆம் திகதி அமைச்சரவையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் கொரல் எனர்ஜி நிறுவனத்தின் சைபிரியன் லைட் ஊடாக 4 மாத காலங்களுக்காக மசகு எண்ணெய் இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதலாவது கப்பல் மார்ச் 25 ஆம் திகதி இலங்கைக்கு வரவிருந்தது. 26 ஆம் திகதியளவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குகிறது.

ஆனால் கொரல் எனர்ஜி நிறுவனத்துடனேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உடன்படிக்கைசெய்–துகொண்டுள்ளது. அந்த நிறுவனமே விலைமனுக் கோரிக்கையில் தகுதி பெற்றிருந்தது.

இந்நிலையில் மார்ச் 25 ஆம் திகதி ஜுவலரி விலாசத்தில் உள்ள நிறுவனமொன்றின் ஊடாகவே எரிபொருள் வருகின்றது. வேறு நிறுவனத்தின் ஊடாக எப்படி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும். இதில் பாரிய மோசடி நடந்துள்ளது. இது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நகையகத்தின் பெயரில் கடந்த நவம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்டது என்று துதுரகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திடமிருந்து எவ்வாறு எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும். இது முழுமையாக சட்டவிரோத கொடுக்கல் வாங்கலாகும். -என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறுகையில் - அவ்வாறு நாங்கள் விலைமனுக் கோரலுக்கு அப்பால் எந்த நிறுவனத்துடனும் கொடுக்கல் வாங்கலை செய்ததில்லை. இப்போதும் கொரல் எனர்ஜி நிறுவனத்தின் ஊடாகவே அதனை பெறுகின்றோம். அவர்களுக்கு தடைகள் வரும் போது வேறு நிறுவனத்துக்குப் பணம் அனுப்ப கோரலாம். ஆனால் அதனை எம்மால் செய்ய முடியாது என்று கூறியுள்ளோம்.

அவ்வாறு இருந்தால் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்திக்கொண்டு இங்கு தெரிவிக்காமல் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாட்டைச் செய்யலாம். வேறு கணக்குடன் கொடுக்கல் வாங்கல் செய்திருந்தால் அதனை ஆதாரங்களுடன் காட்டுங்கள்.- என்றார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் எழுந்த விஜித ஹேரத், நாங்கள் சவால்களை ஏற்றுக்கொண்டே இதனைக் கூறுகின்றோம். மக்களின் நிதி தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நாடாளுமன்றத்திலேயே இதனைக் கூறுகின்றோம். கொரல் எனர்ஜி நிறுவனத்திற்கு அல்லாது வேறு நிறுவனத்திற்கு பணத்தை வழங்க முடியாது. அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கான அனுமதியைக் கேட்டு அமைச்சர் காஞ்சன விஜேசேகர அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்திருக்கிறார். இது மக்களின் பணம். அதனால் மக்கள் பணத்தில் விளையாட அனுமதிக்க முடியாது.- என்றார்.

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

The inEVitable
Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
SOLD OUT
Next Tour
June 30 to July 02
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 27 புதன்கிழமை 10.05.2023 கதிர் 54

## கடன் கால எல்லையை மீள நீடித்தது இந்தியா

இலங்கையால் கடந்த மார்ச் மாத இறுதிக்குள் இந்தியாவுக்கு மீளச் செலுத்தப்படவேண்டியிருந்த ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடனை மீளச்செலுத்துவதற்கான கால எல்லையை அந்நாடு மேலும் ஒரு வருடத்தினால் நீடித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் சேவைசெய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில், பொருளாதாரநெருக்கடியினால்பாதிக்கப்பட்டிருக்கும்இலங்கைக்கு உதவும் நோக்கிலேயே இந்தியா இத்தீர்மானத்தை மேற்கொண்டிருப்பதாக திறைசேரியின்பிரதிசெயலாளர் பிரியந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைகடந்தஆண்டு மிகமோசமானபொருளாதார நெருக்கடிக்கு

2☞

அடுத்த 10 வருடங்களுக்கான

## ஜி.எஸ்.பி. சலுகைக்கு விண்ணப்பிக்க அமைச்சரவை வழங்கியது அனுமதி

இலங்கை2024-2034 காலப் பகுதிக்கான ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைக்காக விண்ணப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அமைச்சர் அலிசப்ரி விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி வரிச்சலுகைக்கான விண்ணபிப்பதற்கு எமது ஆட்சி கொள்கை அளவில் இணக்கம் கண்டுள்ளது. இதற்காக அமைச்சரவையின் அனுமதியைக் கோருவதற்கான பத்திரம் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் சம்பந்தமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுச் செயற்பாடுகள் சேவைப்பிரிவின் ஆசிய-பசுபிக்கின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பவோலா பம்பலோனியுடன் பேச்சுக்களை முன்னெடுத்துள்ளேன்.

அத்துடன் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மறுசீரமைக்கப் படவேண்டும் என்பதுள்ளிட்ட விசேட கரிசனைகள் காணப்படுகின்றன.

அதனைநாம்கவனத்தில் கொண்டுள்ளோம் - என்றார்.

இலங்கையின்

## சகல கடன் வழங்குநர்களுமே மெய்நிகர் தளத்தில் மாநாடு

சீனா மட்டும் பார்வையாளராகப் பங்கேற்பு

இலங்கையின் சகல கடன் வழங்குநர்களும் பங்கேற்ற கலந்துரையாடலொன்று மெய்நிகர் வழியில்நடைபெற்றுள்ளதாக, ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சீனா பார்வையாளர் நாடு என்ற அடிப்படையில் பங்கேற்றிருந்தது. ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் பங்கேற்றன.

இலங்கையின்அனைத்து கடன் வழங்குநர்களும் தனித்தனியாகலந்துரையாடல்களை நடத்துவதற்குப் பதிலாகப் பொதுவான தளத்தை உருவாக்குவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன், 13 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கு மேலதிகமாகவே இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கு 7.1 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. இதில்சீனாவுக்கு 3 பில்லியன் டொலரையும் இந்தியாவிற்கு 1.6 பில்லியன் டொலரையும் பாரிஸ் கிளப்பிற்கு 2.4 பில்லியன் டொலரையும் செலுத்த வேண்டியுள்ளது.

12 பில்லியன் டொலர்களுக்கு அதிகமான யூரோ பிணைமுறிகள் மற்றும் 2.7 பில்லியன் டொலர்கள் பெறுமதியானவணிகக்கடன்கள் தொடர்பில்மீண்டும்கலந்துரையாடும் நோக்குடன் இலங்கை ஆட்சியாளர்கள் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

# தமிழ்த் தரப்புடன் ரணிலின் பேச்சு ஆட்சியைத் தக்கவைக்கும் நாடகம்

நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி. விளாசல்



ஜனாதிபதி ரணிலின் ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்காகவே தமிழ்த் தரப்புடன் பேச்சு நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற எக்பிரஸ்பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சூழல் பாதிப்புக்களுக்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுஷ்கியலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சர்வதேசநாணயநிதியத்தின் நிதி உதவி கிடைத்துள்ளது. இதற்கு மேலதிகமாகவும் சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் அவசியமாகின்றன. ஆகவே தான் இந்த ஆட்சி உள்நாட்டில் சுமூகமான நிலைமை இருப்பது போன்று காண்பிப்பதற்கு முயல்கின்றது.

இதற்காகவே தமிழ் தரப்புடன் பேச்சை முன்னெடுகின்றது. இது தமிழ்த் தரப்பும், ரணிலும் கூட்டிணைந்து மேற்கொள்கின்ற நாடகமாகும்.

அதேநேரம், வடக்கு, கிழக்கு உட்படசில மாகாணங்களுக்கான ஆளுநர்கள் மாற்றப்படவுள்ளனர். ரணில் விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக தமது தாளத்திற்கு ஆடக்கூடியவர்களை ஆளுர்பதவிகளில்அமர்த்துவதற்கு முயற்சிக்கின்றார். ஒட்டுமொத்தமாக இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ரணிலின் ஆட்சியை தக்கவைப்பதற்கான நடவடிக்கைகளே ஆகும் - என்றார்.

## எதிரணியில் அமர 'மொட்டு' திட்டமா?

எஸ்.பி. திஸநாயக்க பதில்



அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு எதிரணியில் அமர்வது தொடர்பில் சிறிலங்கா பொது ஜன பெரமுன எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க இவ்வாறு கூறினார். அத்துடன், ஜனாதிபதியுடன் தமது கட்சிக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். (02)

## சஜித்தே ஜனாதிபதி வேட்பாளர் கட்சியின் செயற்குழு தீர்மானம்



2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்குஅக்கட்சியின் செயற்குழுஅனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது சமகால அரசியல் மற்றும் கட்சியின் அடுத்தகட்டநகர்வுகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டன.

அத்துடன், அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. (02)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தால் நாடாளுமன்றித்தில் இன்று அமளிதுமளி

எக்ஸ்பிரஸ்பேர்ள்கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்ததால் நாட்டின் சுற்றுக் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான இழப்பீட்டைப்பெறுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று நடக்க இருந்த விவாதத்தின் மீது ஆளும் மற்றும் எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் அமளிதுமளியை ஏற்படுத்தியதை அடுத்து சபாநாயகர் சபைநடவடிக்கைகளை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் இன்று பாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத்தொடர்ந்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டு, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான ஐக்கிய மக்கள் சக்தியின் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் தொடங்கப்பட்டது.

நீதிமன்றதில் உள்ள விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதிப்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தினை மீறும் செயற்பாடாகும். ஆகவே, தேசத்துரோகமான இந்த விவாதத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக் ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பினார்.

இதனையடுத்து துார இந்துநில், தயாசிறிஜயசேகர, சஜந்தகருணாதிலக்கஆகியோர், கடந்த காலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம், பிணைமுறிகள் தொடர்பான விடயம் உள்ளிட்டவை தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள், ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணைகள் நடைபெற்றபோது நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்றன. ஆகவே குறித்த விவாதத்தினை முன்னெடுப்பதானது. நாடாளுமன்றச்சட்டங்களுக்கு எதிரானதாக அமையாது என்று பதிலடி கொடுத்தனர்.

அத்துடன், ஆட்சியாளர்கள் இந்த விடயம் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினர். இச்சமயத்தில் அமைச்சர் அலி சப்ரி குறுக்கீடு செய்து குறித்த சம்பவம் இடம்பெற்றபோது தான் நீதி அமைச்சராக இருந்தார் எனவும் அச்சமயத்தில் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்துஆளும்தரப்பின் பிரதம கொரடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, தான் குறித்த விடயத்திற்கான அமைச்சுப் பொறுப்பினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 4 அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்துள்ளதாகக் குறிப் பிட்டார்.

இதனையடுத்து ஆளும் எதிர்த்தரப்பிடையே வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. தொடர்ந்து சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதவிற்குக் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபாநாயகரினால் 10 நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அத்தடன் கட்சித்தலைவர்கள்கூட்டம்நடைபெற்றது. இதனையடுத்து ஒன்றரைமணிநேர்த்துக்குபின்னர் மீண்டும் சபை கூடியது.

## கிணற்றினுள் தவறி விழுந்து 2 1/2 வயதுக் குழந்தை சாவு!

யாழ்ப்பாணம்,இளவாலைப் பகுதியில்கிணற்றுக்குள்தவறி வீழ்ந்த நிலையில் இரண்டரை வயது குழந்தையொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் தந்தை, வேலைநிமித்தம் வெளியே சென்ற நிலையிலும், தாயார் வீட்டுவேலைகளைச்செய்வதில் கவனமாகஇருந்தநிலையிலும், கிணற்றுக்குள் குழந்தை தவறி வீழ்ந்து

2☞

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த

## 2 ஆயிரம் கிலோ கஞ்சா தூத்துக்குடியில் சிக்கியது

(ந.லோகதயாளன்)



இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் தமிழ்நாடு தூத்துக்குடிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம்கிலோ கஞ்சாவைத் தாம் மீட்டுள்ளனர் என்று தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு தூத்துக்குடி சாத்தான்குளம் அருகே உள்ள வேலவன் புதுக்குளத்தில் தனியார் தோட்டத்தில் பெரும் தொகைக் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலின்படி அங்கிருந்த 2 ஆயிரம் கிலோ கஞ்சா தமிழக பொலிஸாரினால் இன்று காலை கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவை மறைத்து வைத்துருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேறு இடத்தில் இருந்து மூடையாக ஏற்றிவரப்பட்டு பொதி செய்யத்தயார் நிலையில் இருந்த கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## உள்நாட்டு கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை

பந்துல தெரிவிப்பு



இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மாவின்விலை அதிகரிக்கப்படவில்லை என்பதோடு , எதிர்வரும் 6 மாதங்களுக்கு தேவையான மா உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் கைவசம் உள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர்பந்துலகுணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது இதனைத்

2☞

# நிதி குறித்த குழுவின் தலைவராக என்னை ஏன் நியமிக்க முடியாது?

## ஹர்ஷ டி சில்வா சபையில் கேள்வி



மத்திய வங்கியின் தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. நாட்டுமக்களுக்கு உண்மை நோக்கத்துடன் சேவையாற்றியுள்ளேன்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமைய அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவராக என்னை ஏன் நியமிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபாநாயகரை நோக்கி கேள்வியெழுப்பினார்.

அது எனக்குத் தெரியாது. தெரிவு குழுவே தலைவரை நியமிக்க வேண்டும். தெரிவுக்குழுவுக்கு நான் தலைமை தாங்குவேன். ஆனால் தலைவரை நியமிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 ஆம் ஆண்டு அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவு குழுவுக்கு எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளை திருத்தம் செய்து நீங்கள் (சபாநாயகரை நோக்கி) ஆளும் கட்சி உறுப்பினரை தெரிவு குழுவுக்கு தலைவராக நியமித்தீர்கள்.

இதன் போது குறுக்கிட்ட சபாநாயகர் 'நிலையியற் கட்டளையில் நான் மாற்றம் ஏற்படுத்தவில்லை. தெரிவு குழுவின் கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமையவே அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவர் நியமிக்கப்பட்டார்' என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய ஹர்ஷ டி சில்வா நீங்களே நாடாளுமன்றத்தின் சபாநாயகர். ஆகவே நீங்களே பொறுப்புக் கூற வேண்டும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவி எதிர்க் கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. இருப்பினும் எதிர்க்கட்சிக்கு தலைவர் பதவி வழங்கப்படவில்லை. நிலையியற் கட்டளைக்கு முரணாக தலைவர் பதவி ஆளும் தரப்புக்கு வழங்கப்பட்டது.

வரி கொள்கை தொடர்பில் அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவில் ஆராயப்படவில்லை. அரசாங்கம் விரும்பிய வகையில் வரி சலுகை வழங்கியது. இறுதியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

நாடு வங்குரோத்து அடைந்ததன் பின்னர் அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன். குறுகிய காலத்துக்குள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினேன்.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் அது வரை காலமும் காணப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுத்தேன். முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் தலைவரை தெரிவுகுழுவுக்கு அழைத்து விசாரணை செய்தோம். தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 16 வருடங்கள் வரி சலுகை வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

பல மோசடிகளை அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழு ஊடாக வெளிப்படுத்தியதற்கு தெரிவு குழு உறுப்பினர்கள் எனக்கு எதிராக செயற்பட்டார்கள். எனது செயற்பாட்டின் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவு குழு உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து அரசாங்க நிதி தொடர்பான நாடாளுமன்ற தெரிவு குழுவுக்கு தலைவராக என்னை நியமிக்க எதிர்க்கட்சியினர் பரிந்துரைத்தார்கள். நீங்களும் (சபாநாயகர்) அதனை ஏற்றுக் கொண்டீர்கள்.

எதிர்க்கட்சியினர் எனது பெயரை பரிந்துரைத்த பின்னணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் பெயரை பரிந்துரைத்து அவரை அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த விடயத்தில் சபாநாயகர் மயந்த திஸாநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடியது முறையற்றது. சபாநாயகருக்கு அந்த அதிகாரம் இல்லை.

மத்திய வங்கியின் ஒருசில தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. கண்ணை மூடிக் கொண்டு நாணயத்தை அச்சிட்டதை அரசாங்க நிதி தொடர்பான குழு கவனத்திற் கொள்ளவில்லை. முறையான தகுதிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் பரிந்துரை உள்ள நிலையில் அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவராக ஏன் என்னை நியமிக்க முடியாது என சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

அதன்போது உரையாற்றிய சபாநாயகர், 'அது எனக்கு தெரியாது. தெரிவு குழுவே தலைவரை நியமிக்க வேண்டும். இவ்விடயத்தில் நான் தெரிவு குழுவுக்கு தலைமை தாங்கும் அதிகாரம் உள்ளதே தவிர தலைவரை நியமிக்க அதிகாரமில்லை' எனப் பதிலளித்தார்.

# அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கும் திட்டத்தில் பெருந்தோட்டக் குடும்பங்களையும் உள்வாங்குக

## வேலுகுமார் வலியுறுத்து



புள்ளிவிவரங்களின் பிரகாரம் தனிநபர் ஒருவரின் வருமானம் 13 ஆயிரத்து 772 ரூபாவுக்கு குறைவாக இருந்தால் அது வறுமை நிலையாகும். அதன் பிரகாரம் தோட்டப்புறங்களின் வறுமை நிலை, சுமார் 56 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

அந்தவகையில் அரசாங்கத்தின் நிவாரணங்கள் வழங்கும் திட்டத்தில் தோட்டங்களில் இருக்கும் குடும்பங்களில் 50 சதவீத்துக்கு அதிகமானவர்கள் இதற்கு உள்வாங்கப்படவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

2022 டிசெம்பர் மாத புள்ளிவிவரங்களுக்கு அமைய தனிநபர் ஒருவரின் வறுமை நிலை 13ஆயிரத்து 772 ரூபாவாக இருக்கிறது. 13ஆயிரத்தி 772 ரூபாவுக்கு குறைவாக பெறுகின்றபோது அது வறுமை நிலையைக் காட்டுகிறது.

அந்த வகையில், நாட்டில் இருக்கிற நகர, கிராம தோட்டப்புறங்கள் என பார்க்கும்போது தோட்டப்புறங்களின் வறுமை நிலை, சுமார் 56 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

அந்தவகையில் நிவாரணங்கள் வழங்கும் திட்டத்தில் தோட்டங்களில் இருக்கும் குடும்பங்களில் 50 சதவீத்துக்கு அதிகமானவர்கள் இதற்கு உள்வாங்கப்படவேண்டும்.

ஒரு தனிநபருக்குரிய வறுமைக்குரிய வருமானம் 13 ஆயிரத்து 772 ரூபாவாக இருக்கும்போது 4 பேர் கொண்ட குடும்பமாக இருந்தால் 55 ஆயிரத்தி 88 ரூபா அவர்களின் குறைந்தபட்ச வருமானமாக இருக்கவேண்டும்.

3பேர் கொண்ட குடும்பமாக இருந்தால் அவர்களின் வருமானம் 41ஆயிரத்தி 316 ரூபாவாக இருக்கவேண்டும். ஆனால் தோட்டப்புறங்களில் இருப்பவர்களின் வருமானம் இதனைவிட மிக குறைவாகவே இருந்து வருகிறது.

அதேபோன்று தோட்டங்களில் ஒரு லயத்தில் பல குடுப்பங்கள் இருந்து வரும் சூழலே இருந்து வருகிறது. ஆனால் அரசாங்கத்தின் நிவாரண திட்டத்தின்போது ஒரு லயத்தில் ஒரு குடும்பமாகவே கணக்கிட்டு, அவர்களை உள்வாங்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனால் அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்துக்கு எந்த நியதியின் அடிப்படையில் வறுமையில் உள்ளவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள்? அந்த நியதிகள் என்ன என்பதை பகிரங்கப்படுத்தி வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊழியர் சேமலாம் மற்றும் நம்பிக்கை நிதியத்தை செலுத்த தவறிய தொழிலதிபர்களுககு எதிராக 15 ஆயிரம் வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதில் அரச நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. குறிப்பாக ஜே.ஈ.டி.பி நிறுவனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எஸ்.எல்.எஸ்.பி.சி நிறுவனம் போன்ற அரச நிறுவனங்களுக்கு எதிராகவும் ஈ,பி,எப். ஈடிஎப். நிலுவை தொடர்பான வழக்குகளும் பேசப்பட்டு வருகின்றன.

அத்துடன் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை காணிகளை விற்பனையை செய்யும் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. கண்டி பிரதேசத்தில் மக்கள் இதற்கு எதிராகப் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகிகின்றமையையும் கண்டுகொள்ளாமல் இந்த பணியை மேற்கொண்டு வருகிறது. – என்றார்.

# ஒரு வகுப்பில் 40 மாணவர்களுக்கு மேல் அனுமதிப்பது முட்டாள் தனமான செயல்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

ஒரு வகுப்பில் நாற்பது மாணவர்களுக்கு மேல் அனுமதிப்பது என்பது முட்டாள் தனமானது எனத் தெரிவித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது என அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பாடசாலையின் ஒரு வகுப்பில் நாற்பது மாணவர்களும் அதற்கு மேலும் மாணவர்களை அனுமதித்தல் என்னும் கல்வி அமைச்சின் முடிவானது முட்டாள்தனமானது.

இதனால் கிராமப்புற பாடசாலைகள் ஆயிரக்கணக்கில் மூடப்படும். மாணவர்களும் பெற்றோர்களும் நகர்ப்புறம் நோக்கி படையெடுக்கும் நிலை உருவாகும். கிராமங்களின் நிலவளம், தொழில்வளம், சமய சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள் முற்றாகக் கைவிடப்படும்.

மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் மாற்றமடையும். வகுப்பறை அளவுகள் போதாமையால் உளவியல் ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

ஆசிரியர்களின் பணிச்சுமை அதிகரித்து மாணவர்களைக் கண்காணித்து கற்பிக்கும் சூழ்நிலை பாதிக்கப்படும். ஆசிரியத் தொழிலுக்கு இனிமேல் எவரும் உள்வாங்க முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறான பாதகமான சூழ்நிலைகள் பல இருந்தும் அரசாங்கம் இத்தகைய முடிவை எவருடனும் கலந்தாலோசிக்காமல் எடுத்திருப்பது முட்டாள்தனமான செயற்பாடு.

உலக நாடுகளிடம் கடனைப் பெறுகிறோம் என்பதற்காக உலநாடுகளில் உள்ள கல்விக் கொள்கைகளையும் வகுப்பறை நடைமுறைகளையும் புறந்தள்ளி இதனை நடைமுறைப்படுத்துவது ஆபத்தானது.

கல்வியால் உயர்ந்துள்ள பின்லாந்து நாட்டில் ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர் தொகை 600 ஐ விட அதிகரிக்க முடியாது.

அதிகபட்சம் 600 பேர் மாத்திரமே ஒரு பாடசாலையில் கல்வி கற்கலாம். வகுப்பறையொன்றில் அதிகபட்ச மாணவர் தொகை 26 ஆகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆயினும், பெரும்பாலான பாடசாலைகளின் வகுப்பறைகளில் சாராசரி மாணவர் தொகை 20 ஆகவே காணப்படுகின்றது.

இலங்கையில் இப்போதுள்ள சூழ்நிலையில் இருபது மாணவர்களை வைத்துக்கொண்டே ஆசிரியர்கள் படும் அவஸ்தை சொல்லில் வடிக்க முடியாதவை.

இந்த லட்சணத்தில் நாற்பது மாணவர்களை பதினைந்திற்கு இருபது அல்லது அதற்கும் குறைவான அளவுகளைக் கொண்ட வகுப்பறைகளுக்குள்ளே ஆறு மணிநேரம் அடைத்து வைத்து கல்வி புகட்டுவதால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரிடமும் முதலில் அறியவேண்டும்.

'ஆயிரம் பாடசாலைத்திட்டம்' 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்பதெல்லாம் எதற்கு என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கேள்விகளாக முன்வைத்துள்ளது.

இதுபோன்ற சுற்றறிக்கைகளையும், தாபன விதிக்கோவைகளையும் நியமன நடைமுறைகளையும் மீறிய செயற்பாடுகள் கல்விப்புலத்தில் நிறையவே நடைபெறுக்கின்றன.

ஒரு மாவட்ட அரசாங்க அதிபரின் கணவர் என்பதற்காக அவர் ஓய்வுபெற இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் புதிய பாடசாலை ஒன்றுக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இது வடக்கில் நடந்துள்ள புதுமை. அதிபராகப் பொறுப்பேற்பவர் குறைந்தது மூன்று ஆண்டுகள் சேவைக்காலம் உள்ளவராக இருக்க வேண்டும் என சுற்றறிக்கை கூறுகின்றது. அந்தப் பாடசாலை உள்ள கல்வி வலயத்தில் பல பாடசாலைகளுக்கு அதிபர்களே இல்லை. குறித்த பாடசாலைக்கு நியமிக்கக்கூடிய பல அதிபர்கள் இருந்தும் அரசாங்க அதிபரின் கணவர் என்பதற்காக அவரை அதிபராக நியமித்திருப்பது நிர்வாக சேவையிலும், கல்வி நிர்வாக சேவையிலும் இருப்பவர்களை மிகவும் கீழ்த்தரமாக மதிப்பிடும் செயற்பாடாக இது பார்க்கப்படுகின்றது.

இப்படி உயர்நிலையில் இருப்பவர்கள் தவறாக நடந்தால் மற்றவர்களை எவ்வாறு வழிப்படுத்த முடியும் என்ற வினாவையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இத்தகைய செய்திகளை ஊடகங்கள் வாயிலாக ஒட்டுமொத்தச் சமூகத்துக்கும் தெரிவிக்கவேண்டிய கடமை எமக்கு உள்ளது.

இதுபோன்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அவை ஒவ்வொன்றாக இனி வெளிஉலகிற்கு அம்பலப்படுத்துவோம் என சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வயோதிப பெண்ணுக்கு அந்தரங்க உறுப்பை காட்டிய இருவர் மட்டக்களப்பில் கைதாகினர்!

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் பிரதேசத்தில் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் இருந்து வீடு சென்ற இளைஞனின் வீட்டை முற்றுகையிட சென்ற வாள்வெட்டுக்குழுவினரை தடுத்து நிறுத்திய வயோதிபப் பெண் ஒருவருக்கு தனது அந்தரங்க உறுப்பை காண்பித்த குண்டா வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளதாகவும் இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பிரதேசத்தில் 4 பேர் கொண்ட வாள்வெட்டுகுழு அந்த பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் மீது கடந்த 2 ஆம் திகதி வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் வாள்வெட்டு தாக்குதலுக்குள்ளான இளைஞன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சம்பவதினமான திங்கட்கிழமை வீடு திரும்பியுள்ளார். இதனையடுத்து அந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்த இளைஞனின் வீட்டை குண்டா வாள்வெட்டுக் குழுவினர் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு குண்டா குழுவினருக்கும் இளைஞனின் உறவினருக்கும் இடையே பெரும் வாக்குவதம் ஏற்பட்ட நிலையில் தாக்குதலுக்குள்ளான இளைஞனின் அம்மா வான 64 வயதுடைய வயோதிப பெண் வெளியில் வந்து குண்டாகுழுவினரை வீட்டுக்குள் உள் நுழைய விடாது தடுத்து நிறுத்திய நிலையில் குண்டாகுழுவைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் தனது அந்தரங்க உறுப்பை உறுப்பை காண்பித்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் வழங்கிய முறைப்பாட்டையடுத்து தலைமறைவாகியிருந்த குண்டா வாள்வெட்டு குழுவைச் சேர்ந்தவரும் ஆண் உறுப்பை காண்பித் தவர் உட்பட இருவரை திங்கட்கிழமை இரவு பொலிஸார் கைது செய்ததுடன் அந்த குழு வைச் சேர்ந்த இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிணற்றினுள் ...

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குழந்தையை மீட்டு, தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையிலும் காப்பாற்ற முடியவில்லை. விசாரணைகளின் பின்னர் குழந்தையின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

## கடன்கால ...

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

முகங்கொடுத்திருந்த வேளையில் இந்தியாவினால் மொத்தமாக வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான அவசர உதவியிலேயே மேற்குறிப்பிட்ட ஒரு பில்லியன் டொலர்கள் கடனுதவியும் உள்ளடங்குகின்றது.

இந்தக் கடனைக் கடந்த மார்ச் மாத இறுதிக்குள் மீளச்செலுத்தப்படவிருந்த நிலையில், இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து அதனை மீளச்செலுத்து-வதற்கான காலப்பகுதி 2024 மார்ச் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு...

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் – கோதுமை மா விலை அதிகரிப்பு தொடர்பில் தவறான செய்திகள் வெளியாகின்றன என மா உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. மூலப்பொருள்களை மாத்திரம் இறக்குமதி செய்து, உள்நாட்டில் கோதுமை மா உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்கள் உள்ளன. நீண்ட காலமாக இந்த நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையிலேயே இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவிற்கு சுங்க வரி அறவிடப்படுகிறது. எவ்வாறிருப்பினும் இது தொடர்பாக இரு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களின் பிரதானிகளையும் தொடர்பு கொண்டு வினவிய போது எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான மா கையிருப்பில் உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கோதுமை மாவின் விலை ஒரு சதமேனும் அதிகரிக்கவில்லை. இறக்குமதி செய்யப்படும் மாவின் விலை மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி வரி அதிகரிக்கப்படும் போது, பொருள்களின் விலைகளும் அதிகரிப்படுகின்றமை வழமையானதாகும். – என்றார்.

# காலி முகத்திடல் போராட்டகாரர்களை கர்ம வினை தொடர்ந்து துரத்துகிறது!

## ரோஹித அபேகுணவர்தன சாட்டை



காலி முகத்திடல் போராட்டகளத்தில் முன்னிலையில் இருந்து செயற்பட்டவர்களை கர்ம வினை துரத்திக்கொண்டிருக்கின்றது. மக்களைத் தவறாக வழிநடத்திய போராட்டக்காரர்கள் பலர் இறந்துகொண்டு இருக்கின்றனர்.

களுத்துறையில் சில நாள்களுக்கு முன்னர் 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் காலி முகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராவார் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

காலி முகத்திடல் போராட்டக் களத்தில் பல்வேறுபட்ட நபர்கள் இருந்தனர். அங்கு கூடாரங்களை அமைத்துக்கொண்டு அந்த இடத்துக்கு பெயரிட்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் எமது எதிரியாக இருந்தாலும் அவருக்கு ஏதேனும் அனர்த்தம் நடந்தால் அது தொடர்பாக மகிழ்ச்சியடையக் கூடாது.

இந்த பௌத்த தேசத்தில் இயற்கையாக சில சம்பவங்கள் நடப்பது தொடர்பில் கேட்க முடிகின்றது. அங்கு பந்தமேந்தி மந்திரம் ஓதி செயற்பட்ட பூசாரி மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்துள்ளார். அதேபோன்று அங்கிருந்த நூலகத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் தற்கொலை செய்துகொண்டார்.

வெசாக்கின் போது கறுப்பு நிறத்தில் வெசாக் கூடு செய்தவர் இப்போது பைத்தியக்காரர்களின் மருத்துவமனையில் உள்ளார்.

இந்த போராட்டத்தில் முக்கியமாக இருந்த ஒருவர் தெஹிவளை பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார். இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மரண போஸ்டர் அச்சிட்டவர் லங்கா வைத்தியசாலையில் மரணித்துள்ளார். இதுதான் கர்ம வினையால் கிடைப்பவை.

இதேவேளை ஜனாதிபதியின் கொடியை திருடிச் சென்ற தொழிற்சங்க பிரதானி விபத்தில் காலொன்றை இழந்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அதுகோரல கொலையுடன் தொடர்புடைய ஒருவர் சிறையில் உயிரிழந்துள்ளார். இவை இந்த ஒரு வருடத்துக்குள் நடந்தவை. கர்ம வினையின் பலன்களை இப்போது காணக்கூடியதாக உள்ளது.

இப்போது ஒரு சம்பவம் நடந்துள்ளது. களுத்துறை நகரில் 16 வயது சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத் துடன் பிரதான சந்தேக நபர் போராட்டத்தின் களுத்துறை மாவட்ட ஏற்பாட்டாளர். இவர் இரண்டு திருமணங்களை முடித்தவர். இவர் போராட்டத்தின் பிரதான நபராவார். போராட்டத்தின் உண்மைத்தன்மையும், போராட்டகாரர்களின் சுயரூபத்தையும் மக்கள் தற்போது நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். கர்மவினை தொடரும். – என்றார்.

# ஜனாதிபதி ரணிலின் தலைமைத்துவம் பல வருடங்களுக்கு நாட்டுக்கு தேவை

## செஷஹான் சேமசிங்க கோரிக்கை

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பொதுஜன பெரமுனவுக்குள் பரந்துபட்ட கலந்துரையாடல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

அத்தோடு குறுகிய காலத்துக்கன்றி, பல வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் நாட்டுக்கு மிக அவசியமாகும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஷஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

தன்மீது பாரிய விமர்சனங்களை முன்வைத்த தரப்பினரின் ஆதரவுடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்காக வாக்களித்துள்ளனர். நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான தலைமைத்துவம் தொடர்பில் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாகவே அவர்கள் வாக்களித்தனர்.



பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பாவிட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் சிந்தித்தே, வேறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோம். அதற்கமைய அன்று காணப்பட்டதை விட இன்று நாடு படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது.

நாட்டை மறுசீரமைப்பது மிகக் கடினம் என்று பலராலும் கூறப்பட்டதையே இன்று ஜனாதிபதி செய்துள்ளார். எனவே அவர் எண்ணும் பட்சத்தில் ஆளுநர்களை மாற்றுவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

அது பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதிக்குமிடையிலான இணக்கப்பாடாகக் கூட இருக்கலாம். அரசாங்கத்துக்குள் கட்சி ரீதியில் நாம் பிளவடைந்து செயற்படவில்லை.

நாம் அரசாங்கத்துக்குள் ஒற்றுமையுடனேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சியினருக்கு எம்மில் பிளவை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படலாம். எது எவ்வாறிருப்பினும் அரசியல் ஒற்றுமையை நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பாதுகாப்போம்.

பொதுஜன பெரமுனவின் தலைவராக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், தேசிய அமைப்பாளராக முன்னாள் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவுமே செயற்படுகின்றனர்.

இந் நிலையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக யாரைக் களமிறக்குவது என் பது தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, நாட்டை நெருக்கடி நிலைமையிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீட்டுள்ளார். நாட்டை மீட்பதற்கான தலைமைத்துவத்தை வழங்கியது மாத்திரமின்றி, சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்தார்.

எனவே அடுத்த ஆண்டு நாம் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால், அதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் உள் ளிட்டவற்றின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் தலைமைத்துவமே அவசியமாகும். எனவே, அவரது தலைமைத்துவத்தின் கீழ் இன்னும் பல ஆண்டுகள் நாடு நிர்வகிக்கப்பட வேண்டும்.

இல்லையென்றால் இடைநடுவில் மீண்டும் சரிவை சந்திக்க நேரிடும். – என்றார்.

# 100 கோடி டொலரை மீளச்செலுத்த மேலும் ஒரு வருட கால அவகாசம்!

## இந்தியா நடவடிக்கை

இலங்கையால் கடந்த மார்ச் மாத இறுதிக்குள் மீளச்செலுத்தப்படவேண்டியிருந்த ஒருபில்லியன்பொலர்கடனைமீளச்செலுத்துவதற்கான கால எல்லையை இந்தியா மேலும் ஒரு வருடத்தால் நீடித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு உதவும் நோக்கிலேயே இந்தியா இந்தத் தீர்மா னத்தை மேற்கொண்டிருப்பதாக திறைசேரியின் பிரதி செயலாளர் பிரியந்த ரத்நாயக்க தெரிவித்தார் என ரொயிட்டர்ஸ் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடந்த ஆண்டு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில் இந்தியாவால் மொத்தமாக வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர் பெறுமதியான அவசர உதவியிலேயே மேற்குறிப்பிட்ட ஒரு பில்லியன் டொலர் கடனுதவியும் உள்ளடங்குகின்றது.

இந்தக் கடனைக் கடந்த மார்ச்மாத இறுதிக்குள் மீளச்செலுத்தவேண்டியிருந்த நிலையில், இந்தியாவுடனான பேச்சுகளை அடுத்து அதனை மீளச்செலுத்துவதற்கான காலப்பகுதி எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிக்கப்பட்டிருப்பதாக ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாத சட்டமூலத்தை வாபஸ் பெற்றால் ஜீ,எஸ்.பி. வரி சலுகையை மீண்டும் பெறலாம்!

## ஹர் டி சில்வா இடித்துரைப்பு



மக்களின் ஜனநாயக உரிமை மீறல், மனித உரிமை மீறப்படும் நாடுகளுக்கு ஐராபே;பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. சலுகை கிடைக்கப்போவதில்லை.

அதனால் ஜீ,எஸ்.பி. சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அரசாங்கம் உடனடியாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்கட்சி உறுப்பினர் ஹர்டி சில்வா தெரித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஐராபே;பிய ஒன்றியத்தால் நாட்டுக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி, சலுகை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதனை மீண்டும் பெற்றுக்கொள்ள நாங்கள் விண்ணப்பிக்கவேண்டும்.

அதன் பிறகு எந்த நாடுகளுக்கு இதனை வழங்குவது என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கும். தற்போது ஆசியாவில் இலங்கை. பாகிஸ்தான் உட்பட 4 நாடுகளுக்கே இந்த ஜீ.எஸ்.பி சலுகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

ஜீ.எஸ்.பி. சலுகையைப் பெற்றுக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்திடம் 27 இணக்கப்பாடுகள் இருக்கின்றன. அதனை அந்த நாடுகள் செயற்படுத்த வேண்டும்.

அந்த இணக்கப்பாடுகளில் பிரதான விடயமாக இருப்பது, மனித உரிமை, தொழிலாளர் உரிமை, நல்லாட்சி மற்றும் சூழலை பாதுகாப்பது தொடர்பானதாகும். அதில் பிரதானமாக இருப்பது தேர்தல் உரிமையாகும்.

தேர்தல் நடத்தாமல் இருப்பது மக்களின் வாக்குரிமையை மீறும் பாரிய விடயமாகக் கருதப்படுகிறது. அதனால் மக்களின் ஜனநாயக உரிமையை விரைவாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தவிடயம் தான் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம். அதனால் அரசாங்கம் எந்தத் தீர்மானத்தை மேற்கொண்டாலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொள்ளாவிட்டால் ஒருபோதும் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. சலுகை மீண்டும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் இருக்கும் விடயங்கள் பல, மக்களுக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் மீறப்படுகின்றன.

மக்களின் உள்ளத்தில் இருக்கும் விடயங்களை வீதிக்கிறங்கி அரசாங்கத்துக்குத் தெரிவிக்கும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. இவ்வாறானதொரு செயலை பயங்கரவாத செயல் எனத் தெரிவித்து, அவர்களுக்கு எதிராகத் தடுப்புக்காவல் உத்தரவு பிரப்பிப்பதை ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிப்பதில்லை.

அதனால் ஜீ,எஸ்.பி. சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அரசாங்கம் உடனடியாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் ஓமான் முதலீட்டாளர் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டிருக்கிறார். அவர் இப்போது தனது தொழிற்சாலையை மூடிவிட்டு செல்லப்போகிறார் எனத் தெரிய-வருகிறது. இவ்வாறு இருக்கையில் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்களா? இந்த தொழிற்சாலை மூடப்பட்டால் 500 இறகும் மேற்பட்டவர்களுக்கு தொழில் இழந்துவிடும் அபாயம் இருக்கிறது. என்றாலும் ஓமான் முதலீட்டாளருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனால் இந்த நாட்டின் சட்டம் தொடர்பில் ஐராபே;பிய ஒன்றியத்துக்கு நம்பிக்கை இல்லை, மக்களின் ஜனநாயக உரிமை தொடர்பில் நம்பிக்கை இல்லை. கட்டளையாளர் போல் நாட்டை நிர்வகிக்க நடவடிக்கை எடுத்தால் ஜீ.எஸ்.பி. சலுகை எமக்கு கிடைக்கப்பாவேதில்லை.

2010 இலும் எமது ஜீ.எஸ்.பி. சலுகையை இல்லாமலாக்கிக்கொண்டது இந்த அரசாங்கமாகும். ஜீ.எஸ்.பி. சலுகை இல்லாமல் போனால் 630 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படும் என்றும் எமது வறுமை நிலை மேலும் அதிகரிக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. அதனால் அரசாங்கம் ஜீ.எஸ்.பி சலுகையை பாதுகாத்துக்கொண்டு செயற்பட வேண்டும். - என்றார்.

# இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் உள்ளவர்கள் நாட்டுக்குவர விரும்பினால் சகலவசதிகளையும் செய்து கொடுக்க தயார்!

## அலிசப்ரி தெரிவிப்பு



இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் வாழும் தமிழ் மக்களை நாம் வரவேற்கின்றோம். அவர்கள் நாட்டுக்கு திரும்பி இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும், அத்துடன் அது தொடர்பான பிரச்சினைகளை வடக்கு எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் நடத்தவுள்ள பேச்சின் போது விரிவாக கலந்துரையாடி தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்நாட்டில் இலங்கையில் இருந்து சென்றவர்கள் இரு பிரிவினராக உள்ளனர். புனர்வாழ்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களின்படி தமிழ்நாட்டில் 106 அகதி முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. அங்கு 19 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 435 பேர் வசித்து வருகின்றனர்.

குறிப்பாக படகுகள் மூலம் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ள அகதிகள் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2012 ஏப்ரல் வரை விமானம் மூலம் சென்றவர்கள் அகதி முகாம்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கு முன்னர் அங்கு சென்றவர்கள் அகதி முகாம்களில் பதிவு செய்யப்படவில்லை.

அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் 34 ஆயிரம் பேர் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

படகுகள் மற்றும் விமானங்கள் மூலம் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களில் ஒரு பிரிவினர் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கின்றார்கள்.

அந்த வகையில் அகதி முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் மொத்தமாக 92,435 பேர் வசிக்கின்றனர். அவ்வாறு முகாம்களில் தங்கியுள்ளவர்கள் இலங்கைக்கு தாம் திரும்புவதற்கு விரும்பினால் அவர்கள் அந்த முகாம் பொறுப்பாளரிடம் அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் நாடு திரும்பும் அனைவரையும் நாங்கள் வரவேற்கின்றோம். அவர்களுக்கு எத்தகைய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமோ அதனை அரசாங்க மேற்கொள்ளும். எமது உதவி உயர் ஸ்தானிகர் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற் கொள்வார். அதேபோன்று இதுவரை நாடு திரும்பியுள்ளவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நாம் நடமாடும் சேவையொன்றை அண்மையில் நடத்தியுள்ளோம்.

அவர்களின் தேவை தொடர்பில் நேரடியாகவே அம்மக்களுடன் கலந்துரையாடியுள்ளோம். பெரும்பாலும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தருபவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு ஒன்றை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதன் போது இந்த விவகாரம் தொடர்பில் அங்கு கலந்துரையாடினால் அது தொடர்பான நடவடிக்கைகளை நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்தும் அங்கு வாழ முடியாது. அவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி, இங்கு இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவோம்.

அதேபோன்று நாம் இந்திய தூதுவருடனும் வெளிவிவகாரத்துறை அமைச்சுடனும் கலந்துரையாடி குறித்த விசாவுக்கான கட்டணம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்போம்.

அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் வெளிப்படையாக செயற்படுகின்றோம். அதற்காக எம்மால் முடிந்த அனைத்தையும் நாம் செய்வோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரச நிதிக் குழு பதவி ஒரு பழிவாங்கலா?

அரச நிதிக் குழுவின் தற்காலிகத் தலைவராக ஜோன்ஸ்டன் பெர்னான்டோ நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த நியமனம் எதிர்க் கட்சிகளால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. நாடாளுமன்ற சம்பிரதாயப்படியும் நிலையியல் கட்டளைப் படியும் அந்தப் பதவி எதிர்க் கட்சிக்கு வழங்கப்படவேண்டியதொன்று. அப்படி அதனைக் கொடுப்பதற்கு ஆளும் தரப்புத் தயாராக இருக்கின்றது. ஆனால், அந்தப் பதவியை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேட்கின்றதோ அவருக்குக் கொடுக்க முடியாது என்பதுதான் ஆளும் தரப்பின் நிலைப்பாடு. இந்த இடத்தில்தான் இதுவொரு பழிவாங்கல் நடவடிக்கையா என்கிற சந்தேகம் எழுகின்றது.

அரச நிதிக் குழு என்பது நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவுக் குழு. இது அரச நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கண்காணிப்பையும், விசாரணைகளையும் நெறிப்படுத்தல்களையும் மேற்கொள்ளும் அதிகாரம்கொண்ட குழு. இந்தக் குழுவின் தலைவராக எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நியமிக்கக்கோரும் ஹர்ஷ டி சில்வா ஏற்கனவே அந்தப் பதவியில் இருந்த ஒருவர், அதுவும் நாடு பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் இருந்தபோது தலைவராக இருந்தவர். நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் சில துறைகளில் தெரிவுக் குழுவின் ஊடாகத் திறம்பட நடந்துகொண்டவர். நாடாறிந்த பொருளாதார வல்லுநர். ஆனால் அவருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பதற்கு ஆளும் தரப்பினர் மறுக்கின்றனர்.

எதிர்க் கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பதற்கு ஆளும் தரப்பினர் தயாராக இருக்கின்றனர். அந்த வகையில் நிதிக் குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான மயந்த திஸநாயக்கவை ஆளும் தரப்பு நியமித்தும் இருந்தது. அதனை ஏற்க மறுத்த ஐக்கிய மக்கள் சக்தி, மயந்தவை பதவியிலிருந்து விலக நிர்ப்பந்தித்தது. அவரும் கட்சிக்குக் கட்டுப்பட்டு பதவியைத் துறந்தார். இப்போது அந்த வெற்றிடத்திற்கு ஹர்வை நியமிக்குமாறு எதிர்க்கட்சி விடுக்கும் கோரிக்கையை ஏற்க மறுத்து ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன்சன் பெர்னான்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆளும் தரப்பினர் ஹர்வை நியமிக்க மறுப்பதன் பின்னணி என்ன? நாடாளுமன்றத்தில் நிதிக் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க் கட்சிக்குக் கொடுப்பது என்கிற முடிவே மக்களாட்சித் தத்துவத்தின்படி ஆளும் தரப்பு தறிகெட்டு நிதிக் கையாளுகைகள் மேற்கொள்வதற்குக் கடிவாளம் இடுவதற்காகத்தான் எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்கும்போது ஹர் அந்தக் கடிவாளத்தை இடுகின்றார் என்பதற்காக அவருக்குப் பதவியைக் கொடுக்க மறுப்பது எப்படி நியாயமாகும்?

ஏற்கனவே பதவியில் இருந்தபோது, சில தனியார் நிறுவனங்களுக்கு தொடர்ந்து 15 வருடங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டதைக் கண்டுபிடித்து அதனை முறைப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை ஹர் செய்துள்ளார். அதுதான் ஆளும் தரப்பினருக்குப் பிடிக்காததாக ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றதா? அதனால்தான் அவருக்கு மீண்டும் தலைமைப் பதவியைக் கொடுப்பதற்கு மறுக்கப்படுகின்றதா? அதுதான் காரணம் என்றால், ஆளும் தரப்பு தான் செய்யும் மோசடிகளை மூடிமறைக்கும் கருவியாக நிதிக் குழுவைப் பயன்படுத்தப்பார்க்கின்றது என்பதே யதார்த்தமான உண்மை. அதை எப்படி அனுமதிக்க முடியும்?

நாடாளுமன்றப் பாரம்பரியத்துக்கு முரணாகவும் மக்களாட்சித் தத்துவத்துக்கு முரணாகவும் இவ்வாறு நிதிக் குழுவின் தலைமைப்பதவியை தனை அனுசரித்துப்போகும் ஒருவருக்கு மட்டுமே கொடுப்பேன் என்கிற அரசுத் தலைவர் ரணிலில் விக்கிரமசிங்கவின் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. அது முறையானதும் அல்ல. எனவே உடனடியாக அந்தப் பதவியை ஹர்விடம் கையளிக்கவேண்டும் ஆளும் தரப்பு.

# எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் சட்டவிரோதம்!

## நீதியமைச்சர் விஜயதாஸ இப்படிக் கருத்து



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறுவது சட்டவிரோதமானது. 6.4 பில்லியன் டொலர் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அதன் பொறுப்பை சபாநாயகர் உட்பட அரசியல் கட்சி தலைவர்கள் ஏற்க வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி நடவடிக்கைகள் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகி கடல் வளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய நியூ டைமன் மற்றும் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்கள் தொடர்பில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நான் சபையில் ஆற்றிய உரை தொடர்பில் அரசியல் களத்தில் மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

குவைட் நாட்டில் இருந்து இந்தியா நோக்கி பயணம் செய்த நியூ டைமன் கப்பல் 2020.09.03 ஆம் திகதி நாட்டின் கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளானது. இந்த கப்பலில் 27 ஆயிரம் கொள்கலன்கள் காணப்பட்டதுடன், கொள்கலன்களில் எரிபொருள்கள் சேமிக்கப்பட்டிருந்தன.

இந்த கப்பல் விபத்து தொடர்பில் கப்பலின் கேப்டனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டார். கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து 2020.09.11 ஆம் திகதி கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. கப்பலை நாட்டின் கடற்பரப்பில் இருந்து வெளியேற்ற பல்வேறு தரப்பினர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

விபத்தால் கடல் வழங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை முழுமையாக மதிப்பீடு செய்யாமல் கப்பலை நாட்டின் கடல் எல்லையில் இருந்து வெளியேற்ற வேண்டாம் என அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உரிய தரப்பினருக்குத் தெளிவாக அறிவுறுத்தினார்.

முழுமையான மதிப்பீடு இல்லாமல் கப்பலை வெளியேற்ற வேண்டாம் என சட்டமா அதிபர் கடற்படை தளபதி, கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஆகியோருக்கு பலமுறை வலியுறுத்தியுள்ள நிலையில் கப்பலை வெளியேற்றுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என வெளிவிவகாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயநாத் கொலம்பகே கடற்படை தளபதி, கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை தலைவர் ஆகியோருக்கு மின்னஞ்சல் ஊடாக அறிவுறுத்தியுள்ளார். இதன் பின்னரே கப்பல் வெளியேற்றப்பட்டது. முழுமையான மதிப்பீடு இல்லாமல் கப்பலை வெளியேற்றியதால் வழக்கு நடவடிக்கைகளுக்கு உரிய தரப்பினர் பங்குப்பற்றுவது இல்லை. கப்பலின் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து 443 மில்லியன் டொலர் மாத்திரமே நட்டஈடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த கப்பல் விவகாரத்தில் ஒரு தரப்பினருக்கு 5 மில்லியன் டொலர் இலங்கையில் உள்ள தனியார் வங்கி ஊடாக இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அவர் முறையாக சி.ஐ.டி.யில் முறைப்பாடளிக்க வேண்டும்.

நாட்டின் கடற்பரப்பில் 2021.05.20 ஆம் திகதி தீ விபத்துக்கு உள்ளாகி அதே ஆண்டு ஜூன் மாதம் கடலில் மூழ்கிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பல விடயங்களை நாடாளுமன்றத்துக்கு அறிவுறுத்தியுள்ளேன். இந்த கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு 6.4 பில்லியன் டொலர் நட்டஈடு பெற்றுக்கொள்ள முடியும் என 40 பேர் அடங்கிய துறைசார் நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

சர்வதேச சட்டத்துக்கு அமைய கப்பல் நிறுவனத்துக்கு எதிராக சிங்கப்பூர் நாட்டின் வணிக மேல் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 6.4 பில்லியன் டொலர் நட்டஈடு பெற்றுக்கொள்வது சாதாரணதொரு விடயமல்ல. இவ்விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் வெளி நாட்டு சட்ட நிறுவனத்தின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டுள்ளது.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை கொண்டு வழக்கு தாக்கல் செய்வதை ஒரு தரப்பினர் ஆரம்பத்தில் இருந்து தடுத்து வருகிறார்கள். பொறுப்புடன் செயற்பட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் கூட பொறுப்பற்ற வகையில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

இந்த கப்பல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றுள்ளது. இது முற்றிலும் சட்டவிரோதமானது. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 36(இ) பிரிவில் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ஒரு விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துரைப்பது அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது முறையற்றது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே நட்டஈடு கோரி சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விவகாரம் தொடர்பில் எவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்ற முடியும்? நாடாளுமன்றத்தின் கோட்பாட்டை, நாடாளுமன்றம் மீற முடியுமா?

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டு, நட்டஈட்டை பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டால் அதன் பொறுப்பை சபாநாயகர் உட்பட அரசியல் கட்சி தலைவர்கள் ஏற்க வேண்டும். – என்றார்.

# டைமன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்கள் விவகாரம்: விசேட தெரிவுக் குழுவை விரைவாக ஸ்தாபிக்குக!

## சபாநாயகரிடம் கோரிக்கை



நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கள் தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 பேர் கொண்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவை உடனடியாக நியமிக்குமாறு ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைவிடுத்து கையெழுத்திட்ட கடிதம் ஒன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த கெடகொட, சஞ்சீவ எதிரிமான்ன, யதாமினி குணவர்தன, டபிள்யூ.டி.வீரசிங்க, ரஞ்சித் பண்டார, மதுர விதானகே, ராஜிகா விக்கிரமசிங்க, குணதிலக்க ராஜபக்ச, குமாரசிறி ரத்நாயக்க, ஜகத் குமார, மஹிந்தானந்த அளுத்கமகே, சம்பத் அத்துகோரல, நாலக கொடேகொட, சுதர்சன தெனிபிட்டிய, கே.ஏ.யு.கே. குணதிலக, நிமல் லான்சா, எச்.எம்.எம். ஹரீஸ், சரத் வீரசேகர, முதித டி சொய்சா, எஸ்.பி.திஸாநாயக்க, பிரதீப் உந்துகொட ஆகியோர் சபாநாயகரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கப்பல் விபத்துக்கள் மற்றும் விபத்துக்களின் பின்னர் ஏற்பட்ட தலையீடுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து சமூகத்தில் பெரும் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் குறித்த கடிதத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த விபத்துக்கள் மற்றும் கப்பல் காப்புறுதி நிறுவனங்களுக் கிடையே இடம்பெற்ற பரிவர்த்தனைகள் குறித்து சபைக்கு உள்ளேயும் வெளியே யும் வெளிப்படுத்தியதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் விபத்துக்கள் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பில் விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்த வேண்டும் என அரச கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கப்பல் விபத்துக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கப்பல் விபத்துக்களில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன என அண்மையில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

# சந்தையில் சீனி விலை அறிக்கை சமர்ப்பிக்குக!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் உத்தரவு

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் சீனியின் விலை அதிகரிக்க சாத்தியம் இல்லை. இவ்வாறான நிலைமையில் சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பாக அறிக்கையை வழங்குமாறு வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

கோதுமை மாவுக்கு அண்மையில் விதிக்கப்பட்டுள்ள வரி காரணமாக, மாவின் விலையை அதிகரிக்க முடியாது. ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி சுமார் 13 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், உலக சந்தையில் கோதுமை மாவின் விலை 15 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான நிலைமையில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள வரி காரணமாக கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது..

அதேபோன்று டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் சீனியின் விலை அதிகரிக்கும் சாத்தியம் இல்லை. இவ்வாறான நிலைமையில் சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பாக அறிக்கை வழங்குமாறு வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதேவேளை, 2023 பெப்ரவரி 13ஆம் திகதி முதல் இதுவரை 277,360 கிலோகிராம் முட்டை நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ கிராமில் 16 அல்லது 17 முட்டைகள் உள்ளடங்குகின்றன. அந்த வகையில் மதிப்பிடப்பட்டு இதுவரை 4.5 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் அரசாங்கம் எப்போதும் உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையிலேயே வரி அறவீடுகளை மேற்கொள்கின்றது.

அத்துடன் 2022 ஆம் ஆண்டு இலங்கைக்கு 35,541,104 கிலோ கிராம் ரின்மீன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக 2, 768 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவு செய்துள்ளது. அந்த வகையில் ஒரு கிலோ கிராம் ரின் மீன் இறக்குமதிக்கான வரியை 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைப்பதுடன் உள்நாட்டு மீன்களை கொள்வனவு செய்வதற்கான உந்துதலை மக்களுக்கு வழங்குவதுமே அதன் நோக்கமாகும். – என்றார்.